விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை (03.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 15

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

வந்தாறுமூலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த வானொலிப்பெட்டி திருத்துநரான வீரசிங்கம் பிரபாகரன் (வயது 30) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவர் அவரது தொழில்நிலையத்தில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-4)

## இலங்கைக்கு இராணுவ உதவியை இந்திய அரசு வழங்கக்கூடாது

### கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் இராணுவ உதவி அளிக்காது என்று தான் நம்புவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று ஜனநாயக முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களை எந்தத் துயரத்திற்கும் உட்படுத்தக்கூடாது. இதனைக் கருத்திற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்புத் தூதராகிறார் விடார் ஹெல்கீசன்

(கொழும்பு)

இலங்கையின் அமைதி முயற்களுக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவராக நோர்வேயின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சிறப்புப் பிரதிநிதியாக செயற்பட்ட எரிக்சொல்ஹெய்ம் இலங்கையில் சமாதானம் தொடர்பான அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து இப் புதிய ஏற்பாடு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சிறப்புத் தூதுவராக யார் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் குண்டுத் தாக்குதல் தமிழ் இளைஞர்கள் ஐவர் பலி!

## மேலும் நால்வர் படுகாயம்

(திருகோணமலை)

**திருகோணமலை பெரியகடை கடற்கரைப் பகுதியில் நேற்றிரவு 7.55 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் மற்றும் துப்பாக்கிச்சூட்டு தாக்குதலில் 5 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.**

**ஆட்டோ ஒன்றில்வந்த இனந்தெரியாத சிலரே இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பலியானவர்கள் நேற்றிரவுவரை அடையாளம் காணப்படவில்லையென அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.**

ஆட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத சிலர் திருகோணமலைபெரிய கடற்கரைப் பகுதியில் நின்ற இராணுவத்தினர் மீது தாக்குதல்நடத்தியதாகவும் அதன் போது கடற்கரைப் பகுதியில் நின்ற இளைஞர்கள் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்த இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதில் நால்வர் படுகாயமடைந்தனர். இதில் பலியானவர்கள் தமிழர்கள் எனவும், அவர்கள் க.பொ.த. உயர்தரம் படிக்கும் மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டபோதிலும் அத்தகவலை ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை.

இச்சம்பவத்தில் காயமடைந்த நால்வர் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## பேச்சிற்கான ஏற்பாட்டைக் கவனிக்க அதிகாரிகள் கொண்ட குழு அமைப்பு

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், சமாதான ஏற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், யாப்பு நிபுணர்கள் அடங்குகின்றனர்.

விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகள் குறித்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி மகிந்த இறுதித் தீர்வு குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அதிமேற்றாணியார் கர்தினால், அதிவணக்கத்துக்குரிய மைக்கோமற் முபி ஏ கொமரை ஆகியோர் நேற்று ஜனாதிபதி மகிந்தவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே ஜனாதிபதி மேற்குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை இச்சந்திப்பில் வடஅயர்லாந்துத்தீவின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு பயனுள்ளதாக இருக்குமென வணக்கத்துக்குரிய கர்தினால் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தாம் ஆராய்ந்து பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின்கீழ் அதிகளவிலான அதிகாரப் பரவலாக்கத்திற்கு தயாராகவுள்ளதாக குறிப்பிட்டார். ஐக்கிய இராச்சியத்திலும், ஐரோப்பாவிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிசேகரிப்பில் ஈடுபடுவதாக ஜனாதிபதி கர்தினாலிடம் சுட்டிக்காட்டினார். (ச-4)

## இயல்புநிலைக்குத் திரும்பும் யாழ். நகரச் செயற்பாடுகள்

### அரச அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் அழைப்பை ஏற்று கடந்த ஒருவாரகாலமாக அரச, வங்கி ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் யாழ். மக்களின் நலன்கருதி அவர்களின் போராட்டம் கடந்த சனிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.

நேற்று சகல அரச நிறுவனங்கள், வங்கிகள் என்பன மீள ஆரம்பிக்கப்பட்டன.

வங்கிகளில் நேற்றுக்காலை முதல் அதிகளவிலான வாடிக்கையாளர்கள் கூடியிருந்தனர். யாழ். செயலகத்தில் பணிகள் யாவும் இயங்க ஆரம்பித்துள்ளன. பிரதேச செயலகங்கள், மாநகரசபை, பிரதேசசபை என்பனவும் தமது பணிகளை வழமைபோல் ஆரம்பித்துள்ளன.

பாடசாலைகள் நேற்று முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது.


இதேவேளை கடந்த ஒருவாரகாலமாக சோபையிழந்து காணப்பட்ட யாழ். நகரம் நேற்றுக் களைகட்ட ஆரம்பித்துள்ளது.

பெருமளவிலான மக்களின் நடமாட்டம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போனோரை கண்டுபிடிக்க யாழ். செயலகம் துரித நடவடிக்கை

### அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ். குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களினால் காணாமல்போனோரைக் கண்டுபிடிப்பது குறித்தும், இறந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்தும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவங்களினால் பலர் காணாமல்போயுள்ளதாக யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. அது குறித்த முழுமையான தகவல்களை மனிதஉரிமை ஆணைக்குழுவிடமிருந்து பெற்று கொழும்பிலுள்ள உயர்மட்டத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தி காணாமல்போனவர்கள் எனத் தெரிவிக்கப்படுபவர்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் தற்போதைய மோதல்களுக்கு இலங்கை அரசே பொறுப்பு - வைகோ

(கொழும்பு)

இலங்கையில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் வன்முறைகள் குறித்து இந்திய இலங்கை கூட்டறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்பட்டாதது ஏன் என தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தநிறுத்த மீறல்களை நிறுத்துமாறு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்திய இலங்கை அரசுகளின் கூட்டறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து அந்த அறிக்கை மௌனம் சாதிக்கிறது. இந்திய இலங்கை கூட்டறிக்கையானது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரானது.

இந்த நிலையில் ஏற்பட்டுள்ள தற்போதைய மோதல்களுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு என்று குறிப்பிட்ட அவர் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கக் கூடாது என்ற கொள்கையை இந்திய அரசு கடந்த 1988ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடித்து வருவதாகவும், 1998இல் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது கூட்டப்பட்ட காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்தக் கொள்கை தொடர வேண்டுமெனவும் வலியுறுத்தியிருக்கின்றார். —(த-9)

# சந்திரிகாவுக்கான ஒதுக்கீட்டில் 10 மில்லியன் ரூபா நிதி இரத்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கான நிதியில் 10மில்லியன் ரூபா இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகாவுக்காக 254கோடியே 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தற்போது 154 கோடியே 6 இலட்சமாக் கபபட்டுள்ளது.

இது தொடர்பான நீதிமன்ற வழக்கில், முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவுக்கு 7 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கப் பட்டதாகவும் அனைத்து நீதிபதிகளுக்குமே கூட ரூ29 மில்லியன் தான் ஒதுக்கப்படுவதாகவும் ஆனால் சந்திரிகாவுக்கு ரூ. 25.4 மில்லியன் ஒக்கீடா என்றும் கேள்வி எழுப்பியது.

இதையடுத்து, சந்திரிகாவுக்கான நிதி ஒதுக்கீட்டில் 10மில்லியன ரூபாவை அரசாங்கம் குறைதது்ளது. (ற)

# ஆண்களின் முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படும் நோய்களும் பரிகாரமும்

**சாதாரணமாக ஆண்களுக்கு 40 வயதுக்கு மேல் ஏற்படும் முன்னிற்கும் சுரப்பி நோய்கள் உரிய காலத்தில் உரிய முறையில் கவனிக்கப்படாவிட்டால் புற்றுநோயாகவும் மாறக்கூடும். முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் மரணத்தையே ஏற்படுத்தக்கூடியது.**

**முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படக்கூடிய நோய்களைப் பற்றியும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளைப் பற்றியும் கேள்வி-பதில் மூலம் விளக்கமளிக்கிறார் டாக்டர் சி.யமுனாநந்தா**

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பியின் நோய்த்தன்மை எவ்வாறு ஏற்படுகின்றது?



**டாக்டர் சி.யமுனாநந்தா**

**பதில்:-** முன்னிற்கும் சுரப்பி ஆண்களின் சிறுநீர்ப்பாதையில் சிறுநீர்ப்பைக்குக் கீழ் அமைந்துள்ளது. இதன் வளர்ச்சி ஓமோன்களின் அளவினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக வயதாகும் போது நோய்நிலை ஏற்படுகின்றது. இதன் போது சிறுநீர்பாதை தடைப்படுவதால் அறிகுறிகள் ஏற்படுகின்றது.

**கேள்வி:-** எவ்வகையான நோயகள் ஏற்படுகின்றது?

**பதில்:-** அழற்சி நிலை பாதகமற்றவகையில் பருமனில் பெரிதாதல், புற்றுநோய் தன்மையுள்ள வளர்ச்சி.

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பின நோய்நிலை அறிகுறிகள் எவை?

**பதில்:-** சிறுநீர் கழித்தலில் சிரமங்கள் ஏற்படும். சிறுநீர் வரத் தாமதம், அடிக்கடி சிறதளவு சிறுநீர் கழித்தல், இரவில் அடிக்கடி சிறுநீர்வரல் என்பவை ஆகும். இறுதியில் சிறு நீர் கழித்தலே கடினமாகி, சிறுநீர் சிறுநீர்ப்பையில் தேங்கி வேதனை ஏற்படும். இந் நிலையில் சிறுநீரினை அகற்ற கதீட்டர் (வடி குழாய்) போடவேண்டும்.

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பியில் நோய்நிலை எந்த வயதில் ஏற்படும்?

**பதில்:-** அழற்சிநிலை 40வயதிற்கு மேல் ஏற்படலாம். பாதகமற்ற முறையில் பருமனிலதிகரித்தல் 50வயதிற்கு மேல் ஏற்படலாம். புற்றுநோய் மாற்றங்கள் 60-65வயதிற்கு மேல் ஏற்படலாம்.

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோயினை எவ்வாறு கண்டறியலாம்?

**பதில்:-** வைத்தியர்கள் பரிசோதிகும் போது மலவாசலின் ஊடாக முன்னிறகும் சுரப்பினை அணுகும் போது அதன் கடினத்தன்மையினை உணர்வர். குருதிப் பரிசோதனையில் PSA (பிஎஸ்ஏ) இன் அளவு குறிப்பிடத்தக்கஅளவு அதிகரித்துக்காணப்படும்.

**கேள்வி:-** வேறு சோதனைகள் யாவை?

**பதில்:-** முன்னிற்கும் சுரப்பியின் மாதிரியினை எடுத்து இழையசோதனை செய்வதால், புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தலாம். மேலும் நோய் வேறு இடங்களுககு பரவாததை உறுதிப்படுத்த என்புகளின் நிலையை அறியவேண்டும். நுரையீரல், ஈரல், மற்றும் வயிற்றின் ஏனைய அங்கங்களையும் அவதானிக்க வேண்டும். இதற்கு எக்ஸ் கதிர்படச் சோதனையும் உதவும்.

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பிப் புற்றுநோயைக் குணப்படுத்த முடியுமா?

**பதில்:-** 10-20% அளவிலான முன்னிற்கும் சுரப்பிநோய் அறிகுறிகள், முன்னிற்கும் சுரப்பிப் புற்றுநோயுடன் தொடர்பாக ஏற்படுகின்றது. பெண்களின் மார்புப் புற்றுநோய் போன்று, ஆண்களில் இது மரணத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் ஆரம்பத்தில் நோய் அறிகுறிகள் தெரியும்போது, குருதிப் பரி சோதனையுடன் கண்டறியப்பட்டால் முற்றாகக் குணப்படுத்த முடியும்.

**கேள்வி:-** எத்தகைய முறைகளில் முன்னிற்கும் சுரப்பில் புற்றுநோயினைக் குணப்படுத்தலாம்?

**பதில்:-** சத்திரசிகிச்சை மூலம் முன்னிற்கும் சுரப்பியினை அகற்றல் அல்லது எக்ஸ்கதிர் சிகிச்சை மூலம் இளவயதினருக்கு சத்திர சிகிச்சை சிறந்தது. 80 வயதிற்கு மேல் புற்றுநோய் இருப்பினும் சில வேளைகளில் அவதானிப்பில் மாத்திரம் வைக்கப்படுவர்.

**கேள்வி:-** முன்னிற்கும் சுரப்பியின்பருமன் அதிகரித்தலுக்கான சிகிச்சைகள் எவை?

**பதில்:-** இதனால் சிறுநீர்கழித்தலில் சிரமம் ஏற்படுவதால் சத்திரசிகிச்சை மூலம் முன்னிற்கும் சுரப்பி அகற்றப்படும். சிறுநீர் வழியினூடாக முன்னிற்கும் சுரப்பிப் பகுதியினை அனுகி அதனை அகற்றும் முறைமையும் உண்டு. □

# இராசிபலன்

**03.01.2006**
**(மார்கழி 19, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 1.11மணிவரை**
**அவிட்டம் பின்னிரவு 12.12 மணிவரை**
**இராகுகாலம் 3.30-5.00 மணிவரை**
**சுபநேரம் 11.00-12.30 மணிவரை**
**அமிர்தசித்தம், சதுர்த்தி விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | போசன சுகம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | அதிகாரம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, உற்சாகம். |
| மிதுனம் | பிதாசிந்தை, கட்டுப்பாடு, புதிய தகவல், அதிக செலவு. |
| கடகம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், பிரயாணம், உடல்நலக்குறை. |
| சிங்கம் | அபூர்வ சந்திப்பு, முயற்சி தாமதம், சுப நிகழ்வு, போசன சுகம். |
| கன்னி | தேக நலன், காரிய அனுகூலம், பணவருவாய், மனமகிழ்ச்சி. |
| துலாம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், ஆரோக்கியக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | சுப செலவு, தேக நலன், பிரயாண சுகம், வேலைச் சுமை. |
| தனுசு | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், நல்ல செய்தி, போசன சுகம். |
| மகரம் | மனச் கிலேசம், முயற்சி தாமதம், அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைநவு. |
| கும்பம் | புதிய முயற்சி, போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை. |
| மீனம் | காரிய அலைச்சல், சுப செலவு, பிரயாணக் கஷ்டம், ஆரோக்கியக் குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உடன் அமைக்கப்பட வேண்டும்

**சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து**

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அமைக்குமாறு சுதந்திர ஊடகஇயக்கம் வலியுறுத்தி யுள்ளது. அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுனந்த தேசப்பிரிய இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு நாட்டில் முக்கிய பங்காற்றவேண்டும்.

சுயாதீன ஆணைக்குழு என்பது நாட்டின் சட்டம் ஒழுங்கின் ஒரு பகுதி. மேலும் பொலிஸ் திணைக்களமானது இலஞ்ச ஊழலற்றது என்பதை உறுதிப்படுத்தக்கூடியது.

ஆகையால் அந்த ஆணையம் மீண்டும் அமைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இடையேயான முரண்பாட்டைச் சுட்டிககாட்டியுள்ள சுதந்திர ஊடகஇயக்கம் அதனைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

ஆணைக்குழு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முரண்பாடுகள் மறைந்து இணக்கப்பாடு உருவாகக் கூடும் என்றும் அந்த அமைப்பு யோசனை தெரிவித்துள்ளது. (ற)

# சமாதான முயற்சிகளை நோர்வே உடனடியாகத் தொடங்க வேண்டும்

**போருக்கு எதிரான முன்னணி வேண்டுகோள்**

(கொழும்பு)

இலங்கை சமாதான முயற்சிகளை நோர்வே அனுசரணையாளர்கள் உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று தேசிய போருக்கு எதிரான முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவர விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் கண்காணிப்புக்குழுவுக்கு உதவவேண்டும்.

வடக்கு-கிழக்கில் புனரமைப்புப் பணிகளை அரசாங்கம் உடனே தொடங்கவேண்டும்.

அனைத்து யுத்தநிறுத்த மீறல்களுக்கும் எதிராகப் போராடுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம் அமைதிப் பேச்சுக்களை வெளிப்படையாக நடத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக துணை இராணுவத்தினரது தாக்குதல்களும் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே யுத்தத்தை உருவாக்கிவிடும் என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# கண்களிலிருந்து கற்கள் கொட்டுகின்றன! ஆய்வுக்காக கற்கள் இலண்டனுக்கு!!

(திருச்சி)

சிறுமியின் கண்களிலிருந்து கற்கள் ரப்பர் துண்டுகள் கொட்டும் அதிசய சம்பவம் இந்தியாவின் பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இவ் விநோதச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

மேற்படி சிறுமியின் கண்களில் இருந்து கற்கள் மற்றும் ரப்பர் துண்டுகள் வெளியாகும் மர்மம் முழு பரிசோதனை செய்தும் கண்டுபிடிக்க முடியாததால் கற்கள் ஆய்வுக்காக இலண்டனுககு அனுப்பப்படவுள்ளன.

பெரம்பலூர் மாவட்டம் ஆண்டிமடம் அருகே உள்ள செங்கமேட்டைச் சேர்ந்தவர் அந்தோணிசாமி. இவரது மனைவி ரெஜீனாமேரி. இவர்களுக்கு 3 குழந்தைகள். அந்தோனிசாமி இறந்துவிட்டார். ரெஜீனாமேரி கூலி வேலைசெய்து குழந்தைகளைக் காப்பாற்றி வருகிறார்.

மூத்த குழந்தை எஸ்தர் டெஸ சிராணி (வயது 11) வரதராஜன் பேட்டையில் 6ஆம் வகுப்பு படிக்கிறார். கடந்த 14ஆம் திகதி எஸ்தர் கண்ணில் இருந்து திடீரென கல் விழத் தொடங்கியது. தொடர்ந்து இரு கண்களிலும் இருந்து கற்கள வந்தவண்ணம் இருந்தன. இதனால பயந்துபோன ரெஜினாமேரி வரதராஜன் பேட்டையில் ஹோமியோபதி டாக்டர், ஆண்டி மடம் மற்றும் விருத்தாசலத்தில் உள்ள டாக்டர்களைப் பார்த்தார். இதுகுறித்து பததிரிகைகளில் செய்திகள்வந்தன.

தகவலறிந்து தொண்டு நிறுவனமான கோவிந்த் ட்ரஸ்ட் எஸ்தரை திருச்சிக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க முடிவு செய்தது. கடந்த 23ஆம் திகதி திருச்சி கோவிந்தராஜன் கண் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்ட எஸ்தரை, டாக்டர் குமார ராஜ் தலைமையில் டாக்டர்கள் மதுசூதனராவ், செரின் ஆகியோர் பரிசோதனை செய்தனர். சிகிச்சை குறித்து டாகடர் குமார ராஜ், மது சூதனராவ் ஆகியோர் நிருபர்களிடம் கூறுகையில்,

எஸ்தாின கண்களை பரிசோதனை செய்ததில் கற்கள் கண்களின் மையய பகுதியில் இருந்து வெளிப்படுகிறது. சிகிச்சைக்குச் சோந்தது முதல் இருநாட்களில் சிவப்பு, கறுப்பு மற்றும் கிரனைட் போன்ற கற்கள் வெளிப்பட்டன. ஒரு சிறிய ரப்பர் துண்டும் வெளிப்பட்டது. இக் கற்களை திருச்சியில் பரிசோதனை செய்ததில் சிலிக்கன் துகள் என கண்டறியப்பட்டது.

இதுகுறித்து மேலும் ஆராய்ச்சி செய்ய இலண்டனில் உள்ள மோர் பீல்டு ஆஸ்பத்திரிக்கு இக் கற்கள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதற்கான செலவுகளை கோவிந்த் ட்ரஸ்ட் ஏற்றுள்ளது.

உடலிலிருந்து யூரியா, கல்சியம் ஆகிய கற்கள் வெளிப்பட வாய்ப்புள்ளன. மேலும் கண்களில் இருநது கண்ணீர் சுரப்பி வழியாக அகனோ மைக சீல் என்ற பொருள் வெளியேற வாய்ப்புள்ளது. ஆனால இது எதனால் ஏற்படுகிறது என்று அறிவதற்காக சிடி ஸ்கேன் எடுத்து அவரது முழு உடலையும்பரிசோதனை செய்தும் கண்டறிய முடியவில்லை.

எங்கள் பரிசோதனையின் நோக்கம் அவரது பார்வைக்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது என்பது தான். தற்போது 3 நாட்களாக கற்கள் எதுவும் வெளிப்படவில்லை. கற்கள் வெளியாகும் போது எஸ்தருக்கு வலியோ, எரிச்சலோ எதுவும் ஏற்படவிலலை. இலண்டன் பரிசோதனையின் முடிவு தெரிந்த பிறகு இது குறித்து முடிவு செய்யப்படும் என்றார். (ற)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த இருதரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்

## எரிக் சொல்ஹெய்ம்



(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்மின் புதிய தூதுவராக நோர்வே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நியமிக்கப்படக்கூடும் என்று தெரிய வருகிறது.

தனது இலங்கைப் பயணம் தொடர்பில் எரிக்சொல்ஹெய்ம் கூறியுள்ளதாவது,

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான சிறப்புத்தூதுவராக உள்ள நாம் நோர்வே அமைச்சர் பொறுப்பும் வகிப்பதால் எமது பிரதிநிதியாக புதிய தூதுவர் ஒருவரை நியமிக்கவுள்ளோம்.

இதுதொடர்பாக இலங்கைப் பயணத்தின் போது ஸ்ரீலங்கா அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் விவாதிக்கவுள்ளேன். இருதரப்பினரது ஒப்புதலுடன் புதிய தூதுவரது நியமனம் அறிவிக்கப்படும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். அமைதி முயற்சிகளுக்கு புதிய நிபந்தனைகள் எதனையும் நாம் விதிக்கவில்லை. ஆனால் ஒரு புதிய செயற்திட்டத்தின் அடிப்படையில் அமைதிப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதில் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்பு உண்டு. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து இருதரப்பினரும உடனடியாக பேச்சுகள் நடத்த வேண்டியது அவசியமானது.

வன்முறைகள் தொடருவதை யுத்த நிறுதத ஒப்பந்தம் கட்டுப்படுத்தும். ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுககான இடம் எது என்பதை ஒதுக்கி வைத்து விட்டு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் நேரடிப் பேச்சுகளை நடத்த முன்வரவேண்டும்.

தொடரும் வன்முறைகளும் உயிரிழப்புகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஆபத்துக்குள்ளாக்கி விடும். இது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிட்டால் அடுத்த கட்ட அமைதி முயற்சிகளை மிகக் கடுமையாகவும் பாதிக்கும்.

அண்மைய இலங்கை வன்முறைகள் தொடர்பில் நாம் மிகுந்த கவலை கொள்கிறோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாபபதற்காக பேச்சுக்கான இடம் எது என்பதை ஒதுக்கிவிட்டு இருதரப்பினரும் பேச்சுக்களை நடத்த முன்வருவது என்பதுதான் எமது புத்தாண்டுச் செய்தியாகும். இதுதான் அமைதி முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான முதல் படிநிலையாகும்.

இருதரப்பினரும் எங்கு பேச்சுகளை நடத்த ஒப்புக்கொணடாலும் நோர்வே தயாராக இருக்கிறது. நோர்வேயைப் பொறுத்த வரையில இடம் என்பது முக்கியம் அல்ல. இப்போதைக்கு நேரடிப் பேச்சுக்கள் தான் முக்கியமானது என்றார். (த)

# தமிழ்க் கூட்டணிகளுக்கு எதிராக சிங்களக் கூட்டணிகள்

## திரட்டுவதில் ஜே.வி.பி தீவிரம்

(கொழும்பு)

அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஒரே குடையின் கீழ் அணிதிரண்டால் அது தமிழ்த் தேசியத்தை பலப்படுத்துவது மட்டுமன்றி எதிர்காலததில் உலகளாவிய தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைவதற்கும் வழிவகுத்து விடும் எனவும், உலகளாவிய ரீதியில் தமிழர்கள் சிங்களவர்கள் எண்ணிப்பார்க்காத அளவில் பெருமபான்மையானவர்கள் எனவும் இனவாத சிங்கள கட்சிகள் அச்சம் கொள்ள ஆரம்பித்துள்ளன.

எனவே தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கிய கூட்டமைப்பிற்கு எதிராக புதிய கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

ஜே.வி.பியின் அரசியல் குழு இது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு- கிழக்கு மற்றும் மலையக தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கவுள்ள பாரிய தமிழ் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு சிங்கள அரசியல் கட்சிகள் முன்வர வேண்டும் என்று ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக முக்கிய சிங்கள அரசியல் கட்சிகளுடனும் தமிழ் தேசியத்திற்கு எதிரான சிறுபான்மை கட்சிகளுடனும் ஜே.வி.பி பேச்சுவாாதைகளை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(த)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுத் தொடர் எதிர்வரும் 6ஆம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30மணி தொடக்கம் 6.30 மணிவரை நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(த-132,133)

# இந்தியாவை அனுசரணையாளராக இணைப்பதற்கு

## பாட்டாளி மக்கள் கட்சி கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசாரணையாளராக உள்ள நோர்வேக்கு பதில் இந்தியாவை செயற்பட வைக்கும் எந்த ஒரு முயற்சியையும் கடுமையாக எதிர்ப்பதாக பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

விழுப்புரம் தைலாபுரத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அக்கட்சியின் உயர் நிலை நிர்வாகக் குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டங்களில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டங்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தலைமை வகித்தார்.

அமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோருவதன் மூலம் எதிர்காலத்தில் எதுவித பலனும கிடைக்கப்போவது இல்லை.

போர் மேகங்கள் சூழ்ந்திருக்கக் கூடிய இலங்கையில் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு நோர்வேக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன் கருதியே இந்திய அரசாங்கம் செயற்பட வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் எதுவித இராணுவ உதவியையும் இலங்கைக்கு இந்திய அரசு வழங்கக் கூடாது. சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகளை அளிக்கக் கூடிய இறுதித் தீர்வு இலங்கையில் உருவாக்கப்பட வேணடும் என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப பட்டுள்ளது. (த)

# ஜோசப் பரராஜசிங்கத்திற்கு மெல்பேர்னில் இரங்கல் கூட்டம்









மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அரசியல்வாதியாக மட்டுமின்றி அரசியல் ஞானியாகவும் திகழ்ந்தவர் என முனைவர் ஜோய் மகேஸ்வரன் அவர்கள் விக்டோரிய ஈழத தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளியன்று மெல்பேர்னில் நடைபெற்ற மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இரங்கல் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தமிழ் அமைப்புகள், மத அமைபபுகளின பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஈழத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருநித்திய கீர்த்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஈகைச் சுடரினை மருத்துவ முனைவர் பொன். சத்தியநாதன் ஏற்றிவைத்தார். வந்திருந்த மக்கள் அனைவரும் உணர்வுடன் மலர் வணக்கம் செலுத்தினர். அகவணககத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

மெல்பேர்ன் தமிழ்க்குரல் வானொலி ஒலிபரப்பாளர் சபேசன் சண்முகம் அவர்கள் தனது உரையில், மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் அநாகரிகச் செயல் என்றும், ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற கட்டாயம் மீண்டும் இக் கொலை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய விக்டோரிய தமிழ் கலாச்சாரக் கழகத்தின் பொதுச் செயலாளர் ந.வக்கிரமசிங்கம், மறைந்த மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தவரென்றும், உலக நாடுகள் பலவற்றில் தஞ்சம் அடைந்துள்ள தமிழர்கள் மீண்டும் அவர்கள் விருப்புக்கு மாறாக ஸ்ரீலங்காவுக்கு திருப்பி அனுப்பப்படக் கூடாது என்று குரல கொடுத்து வந்த ஓர் தமிழ்த் தலைவரென்றும் குறிப்பிட்டார்.

விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்கத்தின் தலைவர் மரியசேகரம்பிள்ளை தனது உரையில், மாவட்ட, மத வேறுபாடுகளின்றி மக்களின் ஒளிமயமான வாழ்வுக்காக உழைத்தவர் மாமனிதர் என்று தெரிவித்தார்.

முனைவர் ஜோய் மகேஸ்வரன் தனது உரையில,

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் அரசியல்வாதியாக மட்டுமின்றி அரசியல் ஞானியாகத் திகழ்ந்தவர் என்றும் சந் தர்ப்பவாத அரசியலுக்கு விலை போகாது, நீதிக்காகவும், தமிழ்த் தேசியத்திற்காகவும் துணிவுடன் செயற்பட்டவரென்றும் கூறினார். (த)

## வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆண்டு-1 வகுப்புக்கள் எதிர்வரும் 2006ஜனவரி 9ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது என வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏனைய வகுப்புகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## கல்விமாணி பரீட்சை

தேசியக் கல்வி நிறுவகக் கல்விமாணிப்பட்ட 2004/2006 பகுதி 1க்கான பரீட்சைக்கு விண்ணப்பம் செய்யவுள்ள யாழ். இந்துக் கல்லூரி நிலைய ஆசிரிய மாணவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை தவறாது நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி த.வில்வநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## சூதாட்டம்

ஒருவர் குதிரைப் பந்தயத்திற்குப் போனார். பணம் கட்டினார். தோற்றுப் போய்விட்டார். மீண்டும் போய் பணம் கட்டினார். தோற்றுப் போய்விட்டார். அடுத்த முறையும் பணம் கட்டப் போன போது அவரைத் தடுத்துக் கேட்டேன். "ஏன் சார்... ஏற்கனவே விட்டது போதாதா... இன்னும் இருப்பதையெல்லாம் கொடுக்க வேண்டுமா?"என்றேன். "விட்டதையெல்லாம் மொத்தமாக எடுக்க வேண்டாமா சார். அதற்காகத்தான் தொடர்ந்து பணம் கட்டுகிறேன்"என்றார். இவரைத் திருத்துவது மிகவும் கஷ்டம்.

இது ஒரு மனநோய். மனநோய்களில் பலவகை உண்டு. மனநோய்கள் பிரிவு அட்டவணையில் சூதாட்டம் என்பது அவதியுறும் நோய் என்ற தலைப்பில் வருகிறது. சூதாட்டம் இரண்டு வகைப்படும் என்று சொல்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். ஒருவகை எப்படியென்றால் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைவதற்காக ஈடுபடுவது. பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம்... கேளிக்கைக்காக கொஞ்சம் விட்டுப் பிடிப்பது என்பது மனிதனின் அடிமனதில் உள்ள விபரீத பிணையச் சுபாவம். இதெல்லாம் அதற்குக் காரணம்.

இன்னொரு வகை எப்படியென்றால் சூதாட்டத்தில் ஈடுபட்டு ஒரு கட்டாய நிலைக்கு ஆளாகிவிடுவது. செய்... ஈடுபடு என்று மனம் ஒரு வெறித்தன்மையைத் துண்டிக் கொண்டே இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் தோற்றுக்கொண்டிருக்கிறோம். என்பது தெரியும். நாம் ஜெயிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதும் தெரியும். இதனால் நமக்கும் கஷ்டம். நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கஷ்டம் என்று தெரியும். அப்படியிருந்தும் சூதாடுவார்கள்.

இதற்குக் காரணம் 'சூதாடியின் பகற்கனவு' என்கிறார்கள் நிபுணர்கள்.இந்த நிலைமைக்கு கட்டாய சூதாட்டம் அல்லது நிர்ப்பந்த சூதாட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆசாமி இருப்பது முழுவதையும் விட்டு விடுவான். கடன்வாங்குவான். திருடுவான். இருந்தாலும் என்றாவது ஒரு நாள் ஜெயித்துவிடுவேன் என்று சொல்லிக் கொண்டிருப்பான். 'விட்டதை எடுத்து விடுவேன்' என்று ஒரு நம்பிக்கைச் சுடர் அவனுக்குள் எரிந்து கொண்டிருக்கும்.இவனை மனநோயாளி என்று சொல்லிவிட முடியாது.

என்ன காரணம் என்றால் இதுபோன்ற ஆட்களிடம் மனப் போராட்டமோ, கவலையோ, பதற்றமோ இருப்பதில்லை. சில விஷேடமான குணங்கள் இவர்களிடம் உண்டு. எதிர்ப்புணர்ச்சி, சிறுபிள்ளைத்தனம், சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறியாத மனப்போக்கு... பொறுப்பில்லாத தன்மை... நெறிதவறி நடப்பது எல்லாமே இவர்களிடம் உண்டு. ஆனால் வெளிப்பார்வைக்கு சிநேகமாகவும், அன்பாகவும் இருப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். ஆதாயம், சுயலாபம் கருதியே பழகுவார்கள்.

இவர்கள் கேட்கும் போது நாம் பணம் கொடுக்கவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மை கைவிட்டுவிடுவார்கள். நம்மீது அபாண்டமாகப் பழிசுமத்தவும் தயங்கமாட்டார்கள். தங்களுடைய சூதாட்ட நடவடிக்கைகளுக்குச் சாதகமான காரணங்களைக் கூறிக் கொண்டிருப்பார்கள். "நீ வேண்டுமென்றால் பார்... ஒரே நாளில் நான் இழந்தவற்றையெல்லாம் மீட்டு லட்சாதிபதியாகிறேனா இல்லையா பார்" என்பார்கள்.

தோற்றுப் போவதை ஒரு படிப்பினையாக இவர்கள் எடுத்துக் கொள்வதே இல்லை. தோற்றுப்போவதிலும் இவர்களுக்கு ஒரு அலாதியான சுகம். தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக்கொண்டு இன்பம் அடைவதற்கு தன்வதை சுகம் என்று பெயர். இவர்கள் அந்த ரகம். சிலர் எப்படித் தெரியுமா? மந்திர எண்ணங்களை வரவழைத்துக்கொள்வது, சூதாடுவதற்காக அலுவலகத்தில் கையாடுவது. அடுத்தவர்களிடமிருந்து திருடுவது. இந்த மந்திர எண்ணம் தீவிரமானால் ஒரு மாதிரி பேச ஆரம்பித்துவிடுவார்கள். "தோல்விதான் வெற்றிக்கு முதல் படி" என்பார்கள்.

தன்னால் பகடைக்காய்களையும் குதிரையோட்டிகளையும் கட்டுப்படுத்த முடியும் என பித்து நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். சில சூதாடிகளை ஆராய்ந்து பார்த்ததில் என்ன தெரியவந்தது தெரியுமா? அவர்கள் குழந்தைப் பருவத்தில் அன்புக்காக ஏங்கியவர்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள். உதவிகளைப் பெறமுடியாதவர்கள். இவர்கள் வளர வளர மற்றவர்களின் நலன்கள் பற்றி அக்கறையற்றவர்களாகிவிடுவார்கள். "அதிர்ஷ்ட தேவதை தன்னுடன் இருக்கிறாள் என்ற அசையாத நம்பிக்கை இருக்கும். இவர்களைத் திருத்துவது மிகவும் கஷ்டம்.

அதனால் பந்தயம், சூதாட்டம் இதுபோன்ற விடயங்களை விட்டு விலகி இருப்பது தான் நமக்கு நல்லது.

ஒரு ஆள் சொன்னான். "என் குதிரை வேகமாக ஓடுவதற்கு என்னவழி? என்று கால் நடைமருத்துவரிடம் கேட்டேன். அவர் ஒரு போத்தல் நிறைய மாத்திரை கொடுத்து தினமும் இரண்டு மாத்திரை வீதம் கொடுக்கச் சொன்னார். முதல் நாள் இரண்டு மாத்திரை கொடுத்தேன். கொடுத்துவிட்டு அதன் மீது உட்காரப் போனேன் அவ்வளவுதான்.அதற்குள் அது அம்பு போல பாய்ந்து ஓடியது" என்றான்.

"அடடா! அதன்பின் நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன். "மீதி மாத்திரையை நான் விழுங்கிவிட்டு அதைத் துரத்திப் பிடித்தேன்" என்கிறான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புதிய அரசு யுத்தச் சூழலை வலிந்து உருவாக்குகிறது

## அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

மனித இனத்தினுடைய அசைவியக்கமே அறிவியல் தொழில்நுட்ப உச்ச வளர்ச்சியில் உள்வாங்கலுக்குள் அடங்கியுள்ளது.

அந்தவகையில் நாங்கள் இன்றொரு தேசத்தை நிர்மாணிப்பதற்காகவும் தேசத்தை மீட்பதற்காகவும் போராடிக்கொண்டிருந்தாலும் எங்களுடைய தேசமும் நாளைக்கு விடுதலை அடையும்பொழுது உலகத்தின் ஓட்டத்தோடும் அதி உச்ச வளர்ச்சியோடும் நாங்களும் இணைந்து கொள்வதன் ஊடாகத்தான் உலகப்பந்திலே எங்களுடைய தேசமும் நிலைக்க கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் எங்களுடைய தலைவர் எவ்வளவு தூரத்தில் எதிரியை விரட்டி எங்களுடைய தமிழீழ தேசத்தை மீட்க அவருடைய கவனத்தையும் அக்கறையையும் அவருடைய ஈடுபாட்டையும் செலுத்துகின்றாரோ அதேபோன்று இளைய தலைமுறையையும் புதிய உலக மாற்றத்தோடும் உலகத்தின் வளர்ச்சிப் போக்கோடும் இணைத்து கொண்டு போகின்ற ஒரு போராட்டத்தையும் சம காலத்தில் அவர் கையிலெடுத்து செயற்படுத்தி வருகின்றார்.

அதனுடைய ஒரு செயற்பாடாகத்தான் எங்களுடைய இந்த அறிவியற்கழகத்தின் தோற்றம் இங்கே கருக்கொண்டிருக்கிறது. இவ்வாறு இளையோர் அறிவியற் கழகத்திறப்பு விழாவில் சிறப்புரை ஆற்றிய தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இந்த அறிவியற்கழகம் மிகப்பாரிய வளர்ச்சியை நோக்கி வளர்ந்து செல்ல வேண்டும் இது எல்லாப்பிரதேசத்திற்குள்ளும் இந்த வேலைத் திட்டத்தை பரப்ப வேண்டும் என்ற பல இடங்களிலே பல நிறுவனங்கள் வேறும் பலரினுடைய முயற்சி காரணமாக ஓரளவு செயற்பட்டுக்கொண்டிருந்தாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட அளவில் சரியான திட்டமிடலின் அடிப்படையில் மேற்கொள்ளாத ஒரு குறைபாடு இருக்கிறது அதை நாங்கள் இந்த ஆண்டில் எங்களுடைய தலைவரின் அறிவுறுததலுக்கு ஏற்ப அதற்கும் ஒரு பிரிவை அமைத்து அதை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செய்து வருகின்றோம்.

அந்த வகையில் இந்த அறிவியற்கழகத்தின் வழிகாட்டுதல் இந்த அறிவியற்கழகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் இங்கொரு பெரிய பரந்த அளவிலான ஒரு மாற்றத்தை கொண்டு வரும் என நாங்கள் நம்புகின்றோம். ஏற்கனவே குறிப்பிட்டது போல எங்களுடைய இனத்தை பொறுத்தவரையில் இன்றைக்கு உலகெங்கும் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றோம். யூத இனம் ஒருகாலத்தில் உலகெங்கும் பரந்து அகதிகளாக நாடற்றவர்களாக இருந்தார்களோ அதேபோன்று எங்களுடைய தமிழ் மக்களும் தமிழினமும் இன்றைக்கு உலகப் பந்திலே ஒருநாடுஎன்ற அங்கிகாரமில்லாமல் உலகமெங்கும் பரந்து வாழ்கிறார்கள்.

ஆனால் எங்களுடைய தலைவரின் காலத்தில் எங்களுடைய தமிழினம் தனது தேசத்தை நிர்மாணிப்பதற்கான -கணிசமான முன்னேற்றத்தை அதைநோக்கிய பயணத்திலே கணிசமான தூரத்தை கடந்திருக்கிறோம்.



இறுதிக் கடடத்தை நோக்கி பிறந்த இந்த ஆண்டு நகரப் போகிறது தமிழினத்தின் தலைவிதியை தமிழினத்தின் இருப்பை தமிழினத்தின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும்ஆண்டாக இந்த ஆண்டு நிச்சயமாக இருக்கப்போகிறது.

ஏனெனில் எங்களுடைய தேசியத்தலைவருடைய மாவீரர் தின கொளகைப் பிரகடன உரையில் தெளிவாக எமக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார் .

இதுவரை கால அரசியல் வரலாற்றைக்கூறி எங்களுடைய தலைவர் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார் இந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டு நகரப்போகிறது. பாரிய நெருக்கடியை சந்திக்கலாம் இன்றைக்கு சிங்கள தேசம் ஒருவலிந்து ஒரு போர்ச் சூழலை உருவாக்குவதற்கு முயன்று கொண்டிருக்கிறது.

தமிழீழம் எங்கும் ஒரு பயங்கரமான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒரு யுத்தத்தை தொடங்குவதற்கான சகலவிதமான தூண்டுதல்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மக்கள் அவ்வளவு துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே ஒரு யுத்த சூழலையே புதிதாக பதவியேற்ற அரசாங்கம் வலிந்து ஏற்படுத்தி கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு நெருக்கடிக்கு உட்பட்ட ஆண்டாகவே இருக்கிறது. இந்த நெருக்கடியில் இருந்து ஒரு விடிவை பெற்றுத்தருவதற்கு எமது தலைவர் தயாராகிக் கொண்டு இருக்கிறார். எங்களுடைய மக்களை அதற்கு தயார்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

பாரிய யுத்த சூழலுக்குள் இருந்தாலும் எங்களுடைய இளைய தலைமுறையை எந்த விதத்திலும் ஒரு பாதிப்புக்கு உட்படாமலும் அவர்களை உடல் உள ரீதியாக ஆரோக்கியத்துடனும் அறிவியல் தொழில்நுட்ப கல்வியியல் மேம்பாட்டையும் அவர்கள மத்தியில் கட்டியெழுப்ப வேண்டும்.

போர்ச் சூழலுக்கு எவ்வாறு முகம் கொடுக்கிறோமோ அதே போல எங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படியான வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

எமது இனப் போராட்டம் உலகத்திலே உன்னிப்பாக பார்க்கப்படும் போராட்டம் ஆகும். உலகத்திலே சிறிய இனமாக இருந்தாலும் நாங்கள் செய்கின்ற சாதனைகள், செயற்பாடுகள் உலகத்தை அதிசயிக்க வைப்பதாகத்தான் இருக்கும் என்றும் குறிப்பிட்டார். (து)

# திருமலை மாவட்ட நிலைதொடர்பில் எழிலன்-கண்காணிப்புக்குழு சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஊர்காவல் படை என்ற போர்வையில் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பது தொடர்பான சிறிலங்கா அரசின் நடவடிக்கை குறித்து திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கண்டனம் தெரிவித்துள்ளார். இவ்வாறான நடவடிக்கையானது தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட தலைவர் மற்றும் அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனுக்கிடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் காலை சமபூர் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற போது எழிலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூதூர், தோப்பூர் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு ஊர்காவல் படை என்ற போர்வையில் ஆயுதப் பயிற்சி வழங்கும் நடவடிக்கையானது தமிழ், முஸ்லிம் உறவுகளுக்கிடையே விரிசலை ஏற்படுத்துவதுடன், குரோதத்தையும் உண்டுபண்ணும் தற்போது திருகோணமலையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கின்றதா? என்பது பற்றி சந்தேகமாக இருக்கின்றது. தமிழ் மக்களின் பிரதேசங்களில் தேடுதல் என்ற போர்வையில் சிங்களப் படையினரால் சோதனை செய்யப்படுகின்றது.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும், சந்தேகக் கண் கொண்டே அரசும் படையினரும் நோக்குகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்களை விடவும், தடைசெய்யப்படாத பொருட்களைக் கொண்டுவரவும், படையினர் அனுமதி மறுக்கின்றனர்.

இது பாரிய யுத்த நிறுத்தல் மீறல் ஆகும். வெளிநாட்டு பிரதிநிதிகள், தொண்டர் நிறுவனங்கள் எமது பகுதிக்கு வருவதற்கும் படையினர் தடைசெய்கின்றனர். இச் செயற்பாடு எமது பகுதிக்கு இடையிலான தொடர்பை துண்டிப்பதாக அமைகின்றது எனக் குறிப்பிட்ட எழிலன்,

இராணுவம் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இவை யுத்தநிறுத்த ஒப்பந்தங்களுக்கு முரணானவை. படையினர் மீதானதும், பொதுமக்கள் மீதானதுமான தாககுதலைச் செய்பவர்கள் அடையாளம் தெரியாத ஒரு குழுவினரே.

அவர்கள் மீது நட வடிக்கை எடுக்காது ஒட்டு மொத்த தமிழ்மக்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும் என மேலும் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக திருமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் படையினரது செயற்பாடுகள் சம்பந்தமான திருமலை இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு இவ்விடயம சுட்டிக்காட்டப்படும் எனத் தெரிவித்தார். (த)

# தமிழர்கள் கைதாவதைக் கண்டித்து விரைவில் போராட்டம் நடத்தப்படும்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மனோகணேசன் தெரிவிக்கையில்,

கொழும்பில் பொலிஸ் மற்றும் அரச படைகளின் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமிழ் மக்கள் கைது செய்பட்டதும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுநதரவுடன் தொடர்பு கொண்டு விடுதலைக்கான நடவடிக்கையை மேற்கொண்டோம்.

வெள்ளவத்தை,கொட்டாஞ்சேனை,முகத்துவாரம் காவல் நிலையங்களுக்கும் நேரடியாகச் சென்று கைதானவர்களை விடுவிக்க முயற்சி மேற்கொண்டோம.

தமிழ் மக்களின் கைது நடவடிக்கைக்கு எதிராக கொழும்பில் விரைவில் போராட்டங்களை நடத்த தயாராகி வருகிறோம் என்றார். (த)

# யாழ். மாவட்ட விவசாயிகளிடையே விவசாயத் திணைக்களம் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றோர்

(பருத்தித்துறை)

விவசாயத்திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் யாழ்.மாவட்டத்தில் நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட விவசாயிகளிடையே யாழ். விவசாயத் திணைக்களம் நடத்திய போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வெளியாகியுள்ளது.

யாழ்.திருநெல்வேலியிலுள்ள உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகமண்டபத்தில் இதற்கான பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது. போட்டிகளில் வெற்றியீட்டிய 80 விவசாயிகள் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் விபரங்கள் வருமாறு:

### சிறந்த நெற் செய்கையாளர் விபரம்

நடராசா பேரின்பராசா (செம்பியன் பற்று) இராமலிங்கம் கந்தசாமி (இமையாணன்) கணபதிப்பிள்ளை சண்முகசுந்தரம் (மட்டுவில்) கந்தையா மனோகரன் (கைதடி) கந்தையா நாகரத்தினம் (நீர்வேலி) இளையதம்பி பசுபதி (அச்சுவேலி) தர்மலிங்கம் தர்மகிருஸ்ணன் (சங்குவேலி) சிவசம்பு அம்பிகைபாகன் (ஆனைக்கோட்டை) திருநாவுக்கரசு மகேந்திரன் (நாயன்மார்கட்டு) வேலன் சிவலிங்கம் (சங்கானை) கனகசபை தர்மசூரியர் (நெடுந்தீவு) தம்பிஜயா குணநாயகம் (மண்கும்பான்)

### சிறந்த உப உணவு செய்கையாளர்கள் விபரம்

செபஸ்ரியாம்பிள்ளை அருள்ராஜா (செம்பியன்பற்று) பாலசுப்பிரமணிய ஐயர் பத்மநாதக் குருக்கள் (கெருடாவில்) தம்பையா பாலேந்திரன் (மிருசுவில்) கார்த்திகேசு சுப்பிரமணியம் (கைதடி) மாணிக்கம் இலங்கைநாதன் (கோப்பாய்) நடராஜா இராகவன் (அச்சுவேலி) இராசா அரசரத்தினம் (ஈவினை) கந்தையா மயில்வாகனம் (அளவெட்டி) நாகலிங்கம் தியாகராஜா (கோண்டாவில்) கணபதிப்பிள்ளை மகேசன் (பொன்னாலை) முருகேசு இலங்கைநாதன் (நெடுந்தீவு) வைத தீஸ்வரன் கரிதாஸ் (அனலைதீவு)

### நில வினைத்திறன் பயன்பாட்டு விவசாயிகள் விபரம்

கந்தையா நடராசா (குடத்தனை) கதிர்காமத்தம்பி குணநாதன் (அல்வாய்) சதாசிவம் கிருபாகரன் (மட்டுவில்) ஆறுமுகம் கந்தசாமி (நீர்வேலி) துரைஜயா சுரேஸ்கரன் (புத்தூர்) சுப்பிரமணியம் சிவகுமார் (குப்பிளான்) சின்னையா விக்கேஸ்வரன் (மாசியப்பிட்டி) இரத்தினம் தங்கவேல் (கோண்டாவில்) பொன்னம்பலம் தர்மலிங்கம் (சங்கானை) சண்முகலிங்கம் கேதாரன் (புங்குடுதீவு) திருமதி இராசத்திரனம் சந்திரலேகா (புளியங்கூடல்).

### சிறந்த வதிவிட வேளாண்மை விவசாயிகள் விபரம்

மயில்வானம் மலர்விழி (செம்பியன் பற்று) கார்த்திகேசு அமரசிங்கம் (புலோலி வடக்கு) சிற்றம்பலம் கிருபா (வரணி) திருமதி டினேஸ் சியாமளா (கைதடி) திருமதி இராஜேஸ்வரன் கமலேஸ்வரி (கோப்பாய்) பொன்னையா இராமச்சந்திரன் (சிறுப்பிட்டி) குமாரகுலசிங்கம் கிரபாகரன் (உடுவில்) திருமதி செல்வராஜா சந்திரலீலா (மானிப்பாய்) செல்வி குலசேகரம் இராஜகுமாரி (கொழும்புத்துறை) காசிநாதர் கணேசபிள்ளை (காரைநகர்) திருமதி பிரபா சந்திரன் (நயினாதீவு) திருமதி தங்கராஜா கமலாதேவி (வேலணை).

### சிறந்த நீர் முகாமைத்துவத்தை பின்பற்றிய விவசாயிகள்

தனபாலசிங்கம் விக்னேஸ்வரன் (முள்ளியான்) இராசையா குணசேகரம் (கெருடாவில்) ஆறுமுகம் சிவபாதசுந்தரம் (மந்துவில்) சின்னத்தம்பி சிவானந்தன் (கைதடி) நல்லையா தயாபரன் (கோப்பாய்) நல்லையா கஜமுகநாதன் (சிறுப்பிட்டி) வைரமுத்து சற்குணம் (ஏழாலை) பஞ்சலிங்கம் வாகீசன் (மல்லாகம்) சின்னத்துரை சிவரூபன் (அராலி) கந்தையா தர்மலிங்கம் (நெடுந்தீவு) நாகரட்ணம் ஜெயக்குமார் (சரவணை).

### சிறந்த பெண் தலைமை தாங்கும் விவசாயிகளாகச் சாதனை புரிந்தோர்

செல்வி அருணகிரி ஜெயந்தினி (செம்பியன்பற்று) திருமதி தங்கவேல் பவளம் (உடுப்பிட்டி) திருமதி சுப்பிரமணியம் விமலாதேவி (வறணி) திருமதி கனகலிங்கம் சிவபாக்கியம் (கைதடி) திருமதி செல்வராஜா தவனேஸ்வரி (உரும்பிராய்) திருமதி தர்மலிங்கம் விஜயராணி (புத்தூர்) திருமதி சிவசுப்பிரமணியம் சாந்தினி (ஈவினை) திருமதி முருகையா தவமணி (மாசியப்பிட்டி) திருமதி விஜயபாலசிங்கம் யாழினி (கோண்டாவில்) திருமதி பரிமளகாந்தி நாகேஸ்வரன் (தொல்புரம்) திருமதி கந்தையா தங்கமுத்து (நெடுந்தீவு) திருமதி சந்திரகுமார் இராசலட்சுமி (புளியங்கூடல்)

### யாழ்.மாவட்டத்தில் சிறந்த விவசாயிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

வாழைச்செய்கை:- திருமதி சோமசுந்தரம் தவச்செல்வி (சிறுப்பிட்டி) தேசிக்காய் செய்கை:- வீரசிங்கம் புஸ்பநாதன் (உரும்பிராய்) மாமரச் செய்கை:- அருணாசலம் செல்லையா (கச்சாய்) திராட்சை செய்கை:- சிவசிதம்பரம் சாந்தக்குமார் (புன்னாலைக்கட்டுவன்) பாரம்பரிய தானிய செய்கை:- கந்தையா யோகநாதன் (நெடுந்தீவு) கொள்கலன் விவசாய செய்கை:- கிருஸ்ணமூர்த்தி வசந்தராஜ் (புத்தூர்) ஒருங்கிணைந்த பண்ணையாளர்:- பொன்னையா நிருவாகசிவகம் (சங்குவேலி) நடுகைப் பொருள் உற்பத்தி செய்கை:- திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி (கச்சாய்). (த-52)

# நிவாரணம் வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு அடுத்தடுத்த கட்ட நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

அண்மையில் யூலை மாத்துக்குரிய பொருட்களே வழங்கப்பட்டதாகவும் தற்போது ஆகஸ்ட் மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரைக்குமான சமுர்த்தி முத்திரைக்கு பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-108)

# நிரந்தர நியமனம்

(கொழும்பு)

சுகாதாரத்துறையுடன் இணைந்த சகல அமைய மற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா கருத்துத் தெரிவிக்கையில் சுகாதாரத்துறையில் சேவையாற்றும் 6 ஆயிரம் அமைய மற்றும் பகுதி நேர ஊழியர்களுள் சுமார் 2 ஆயிரம் பேருக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் அவர்கள் விரைவில் நிரந்தர நியமனங்களைப் பெறுவார்கள் என்று தெரிவித்தார். (த-9)

## மஹிந்தவின் இந்திய விஜயம்

# வெற்றியளித்துள்ளது - ஜெகான்பெரேரா

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் வெற்றியளித்துள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான்பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது இந்தியா இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அதேநேரம் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பில் வகிக்கும் நிலைப்பாடு என்னவென்பதையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

இதனையடுத்து இலங்கை அரசாங்கத்திற்கு நோர்வே ஏற்பாட்டாளர்களைக் கொண்டு எவ்வாறான தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதனை தீர்மானிக்கும் நிலையேற்பட்டுள்ளது.

எனவே, எம்மைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியின் விஜயம் வெற்றியளித்துள்ளதாகக் கருத வேண்டியுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (த-8)

# சட்டவிரோத மின்பாவனையை தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் புத்தாண்டு நடவடிக்கைகளில் 4 விடயங்கள் முக்கியமாக் இடம்பெறவுள்ளன.

இதன்படி மின்சக்தி வீண்விரையம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு விசேட க்வனஞ் செலுத்தப்படவுள்ளது.

மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், மின்சக்தி வீண் விரையம் செய்யப்படுவதற்கு மிகப் பழைய மின் விநியோகக் கம்பிகளும் மேலதிகமாக உள்ள மின் கோபுரங்களுமே காரணம்.

சகல மாவட்டத்திலும் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மின்சாரப் பாவனையைத்தடுப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யவென நிலக்கரி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்திற்கு உச்சக்கட்ட முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். (த-7)

# வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்திற்குத் தெரிவு

உலக வங்கியின் உதவியுடன் வடக்கு, கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் 2ஆம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்.மாவ்ட்டத்திலுள்ள தொகுதிகளில் கீழ் காணும் கிராமசேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

கைதடி நாவற்குழி, மந்துவில் வடக்கு, கொடிகாமம் வடக்கு, மந்துவில் கிழக்கு, மிருசுவில் வடக்கு, கோவிற்குடியிருப்பு, குடமியன், இடைக்குறிச்சி, மந்துவில் மேற்கு, வெள்ளாம் போக்கட்டி, நுணாவில் மத்தி, வரணி இயற்றாலை, கைதடி நுணாவில், கொடிகாமம் தெற்கு, நாவற்காடு, மிருசுவில் தெற்கு, தாவளை இயற்றாலை, கொடிகாமம் வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் இவ் வேலைத் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ற-108)

# திருப்திகரமான முறையில் 'மஹிந்தசிந்தனை' அமுலாகிறது -வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள பல விடயங்கள் திருப்திகரமான முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

உரமானியம், அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, சமுர்த்திக் கொடுப்பனவுகளை அதிகரித்தல், மகாபொல புலமைப்பரிசில் திட்டம் என்பன இவற்றில் அடங்கும்.

நேற்று முன்தினம் காலை ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் முகமாக தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் என்பனவற்றின் கட்டமைப்பை மாற்றங்களுக்கு உட்படுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் திட்டமிடலுக்கான புதிய அமைச்சை ஏற்படுத்துவதன் மூலம் மற்றைய அமைச்சுக்களின் நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியளிக்கும் என்று தெரிவித்தார். (த-9)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள சம்மேளனக் காரியாலயத்தில் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுளளது. (த-7)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பில் இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை

உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை உரியகாலத்தில் நடத்துவதா அல்லது பிற்போடுவதா என்பது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் முறைமைகளை மாற்றியமைப்பது குறித்து இதுவரை தீர்வு எடுக்கப்படாததே இதற்குக் காரணமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கான முறையை மாற்றுவதா இல்லையா என்பது குறித்து உடனடியாக அறிவிக்குமாறு கடிதமூலம் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றின் ஆட்சிக் காலம் நிறைவு பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது குறித்து இதுவரை எந்தவித இணக்கப்பாடும் காணப்படவில்லை.

அவசியம் ஏற்படும் போது தேர்தலை ஒரு வருடத்திற்கு பிற்போடும் அதிகாரம் இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த-9)

# தம்பி குத்தியதில் அண்ணன் மரணம்

தம்பியாரின் போத்தல் குத்திற்கு இலக்கான அண்ணன் உயிரிழந்தார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஊரெழுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஊரெழு வடக்குப் பகுதியில் வசிக்கும் சகோதரர் இருவருக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. அதன் போது ஆத்திரமடைந்த தம்பி, அண்ணனை போத்தலால் குத்தியதில் அண்ணன் உயிரிழந்தார். இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கண்ணன் (வயது 26) என்பவரே உயிரிழந்தவராவார். இதேவேளை சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-25)

# வேலி முகப்புகளை அகற்றுமாறு சாவ.இராணுவம் உத்தரவு

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீடுகளின் வேலிகளின் முகப்புகள் அகற்றப்படுகின்றன. இராணுவத்தினரால் இவற்றை அகற்றுமாறு மக்கள் பணிக்கப்படுகின்றனர்..

முதலில் காணிகளில் உள்ள மரக்கிளைகளை வெட்டும்படி கூறப்பட்டது. இப்போது வேலி முகப்புகளை அகற்றுமாறு பணிக்கப்படுகிறது.

இதற்கு அஞ்சி மக்கள் வேலி முகப்புகளை அகற்றுவதை காணக்கூடியதாக உள்ளது. (அ-108)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் பெப்ரவரி மாதத்துக்குரிய பலன்கள்

(தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| ரா | | செ | |
| பு. சந் | 2006 பெப்ரவரி 1 ராசி நிலை | | (வ) சனி |
| சூ | | | |
| சு | | குரு | கே |

### துலாம்
( சித்திரை3, 4 சுவாதி, விசாகம் 1,2,3 )

இம்மாதம் ஆரம்பமே உங்கள் அதிர்ஷ்டக் கிரகமான சனி வக்ரம், இந்த வக்ர நிலை தீரும் வரையில் பொதுவாக பல பிரச்சினைகள் சந்திக்க வேண்டும். நண்பர்கள் சிலர் உங்கள் வழிக்கு இணங்கி வராத போக்கு உங்களை பாதிப்புக்கு உள்ளாக்கிவிடும். சகோதர, சகோதரி வகையும் அப்படியே. சிலர் நாகரீக வாகனம் விற்பது மாற்றி அமைப்பதும் உண்டாகும். நீங்கள் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதவர் அல்ல என்றாலும் இக்காலம் முக்கியஸ்தர் மூலம் முயன்ற தொழில் சம்பந்தமான உங்கள் புதிய முயற்சிகள் திருப்திகுரிய அளவு இயக்கம் உடையதாக இருக்கும். புத்திரியர்கள், புத்திரர்கள் ஆரோக்கியம், கல்வியும் கவர்ச்சிகரமாக இருக்கும். வெகுநாட்கள் எதிர்பார்த்த வாய்ப்பு இப்போதான் கூடி வருகிறது, கொடுக்கல் வாங்கல் செய்யவும் ஏற்ற காலமாகும். இயந்திரம் வாகனத் தொழில் மூலம் வருவாய் உடையவர்களுக்கு கடந்த காலத்தை விட வருவாய் அதிகரிக்கும். பழைய கடன் தீர்ந்து புதிய கடன் பெறுவது போன்ற நன்மைகளும் உண்டாகும். குடும்பத்துப் பிரச்சினைகள் அனைத்தும் உங்களுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கிறது. கடன் இருந்தும் வழக்கு பாதிப்பு இல்லை. கணவன் மனைவி உறவு ஒரு பகுதி நன்றாகவே இருக்கின்றன. சிலருக்கு குடும்பச் சூரியனும் 2இல் குருவும் திருமணம் போன்ற சுபங்களையும் முடித்து வைத்து விடுவர். இது ஆண், பெண் இரு பிரிவினருக்கும் உரியதே. எழுத்து ஒப்பந்தம் புதிய தொழில் ஸ்தாபனம் போன்ற நன்மைகளும் இருக்கின்றன. நீங்கள் ஒரே சீரான தொழில் போக்கு உடையவர்கள் தன நிலையில் திருப்தியான போக்கு இருக்கும். தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிக்கொண்டே வரும். நண்பருக்கு உபகாரம் செய்ய வேண்டியவர்கள் நீங்கள். பூமி வீடு போன்ற வழிகளிலும் தன ஆதாயத்தைப் பெறுவீர்கள். காலம் கடந்த தஸ்தாவேஜுகள் புதுப்பிக்கப்டுவதும் கூட உண்டாகும். மலைப்பிரதேச புண்ணி ஸ்தல யாத்திரையும் தொடரும் காலம். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இப்போது ஓய்வு கிடைக்கும் காலம். வழக்கு இருப்பவர்களுக்கு முடிவு தள்ளிப் போய்விடும். கீழ்நிலை ஊழியர்கள் தொடர்பு நெருங்கியதாக இருக்கிறது. தன்னம்பிக்கை வளர்ந்துவரும். காதல், கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்புகளுக்கு ஏற்ற காலமிது. உறவினர்கள் மூலம் உருவான சிக்கல் வளர்ந்து கொண்டே வரும். உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். செய்தொழில் வகையில் உழைக்கும் உழைப்புக்குத் தக்க பலன் கிட்டுவது கடினம், வியாபாரரிகள் இதை உத்தேசித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வண்டி, வாகனம் வைத்து தொழில் நடத்துகிறவர்கள் விபத்தால் நட்டம் அடையக் கூடியவர்கள். சகோதரர்கள் வகையில் கடுமையான செலவுகள் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. புத்திரர், புத்திரியர்கள் கல்வி அவ்வளவு தெளிவாக இருக்காது. அதற்காக செலவுகள் செய்ய வேண்டிய அவசியமும் உண்டாகும். தைரிய உயர்வு தன்னம்பிக்கையும் பிறக்கும் காலம்.

### விருச்சிகம்
(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

உங்கள் அதிர்ஷ்ட கிரகமான சந்திரன் தினசரி நன்மை, தீமைகளுக்கு உரியவன் என்பதால் மற்ற கோள்களைவிட, சந்திரனைப் பார்த்து நீங்கள் செயல்படுவது மிக மிக அவசியம். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு கவன மறதியினால் தவறு ஏற்படுவது மேல் அதிகாரிகள் சீற்றத்திற்கும், வாக்குவதத்திற்கும் ஆளாகுதல் போன்றவை உண்டாகும். குழந்தைகள் வகை சிறு மருத்துவச் செலவு இருக்கிறது. கலைப்பிரிவினர்களுக்கு சில கவர்ச்சியான ஒப்பந்தம் இருக்கிறது. குடும்ப வகையில் எல்லாம் நன்றாக இருக்கும். உங்கள் தேக சுகம் கவனிக்கத்தக்கது. நரம்பு நோய், இருமல், சீதள பாதிப்புங் கூட இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாகவே இருக்கின்ற குடும்பத்து உறவு பிரச்சினைகள் தொடர்ந்து இருந்துவரும். வழக்கு உள்ளவர்கள் செலவைத் தான் ஏற்க வேண்டி இருக்கிறது. சகோதர, சகோதரி வகையில் மன திருப்தியான போக்கு இருக்க முடியாது. புத்திரியர்கள் கல்வி மேன்மை இருக்கும். எல்லா வகையிலும் திருப்தியான சூழ்நிலையே இருந்து வரும். உங்களை குறைக் கூறியவர்கள் இப்போது உங்களைப் பின் தொடரும் காலம். உங்கள் வேகமான செயல்கள் மற்றவரை பொறாமையடையச் செய்யும் என்றாலும், உங்கள் காரியங்கள் எதுவும் தடைபடாது. மூதாதையர் பொருளை விற்பனை செய்வதும் சில மாற்றமும் அவசியமாகும். தனம் கொடுக்கல், வாங்கல் இடை இடையே முடைப்பட்டு வருகின்றன. பிரயாணம் குறித்தபடி இல்லை. அதிகமான தூக்கம், எதிலும் அவசரம் இல்லாமை போன்ற நிலை இருக்கிறது. வரவேண்டிய பணத்திற்கு நீதிமன்றம் போவது வழக்கு செலவும் ஆரம்பமாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு எதிர்பாராத மாற்றம் மனசலனத்தை உண்டாக்கும். எழுத்து மூலம் பாதிப்பும் உண்டாக்கும். சிலருக்கு சில வகையான உயர்வு உடையவர்களாக இருப்பார்களே தவிர, காரிய சாதனை நிற்காது. ஆனால் வழக்கு மட்டும் முடிவு பெறாது. வார்த்தையளவில் நின்ற காரியங்களைச் செயல்முறைக்குக் கொண்டு வந்து விடுவீர்கள். இது வாரம் பிற்பகுதியில்தான் சாத்தியமாகும். உறவினர் வருகை குடும்பத்தில் சுபச் செலவுகளை உண்டாக்கும். உத்தியோர்கப் பிரிவு ஆண், பெண்களுக்கு விருப்பம் இல்லாத கடிதம் வருவது, இலாகா மாற்றல் உத்தரவைப் பெறுவது போன்றவைகள் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறு சிறு பாதிப்பு மருந்து செலவுகளும் உண்டாக்கும். பெண்களுக்கு இப்போது வந்திருப்பது புது இடம்தான். சில வகையில் மனத்திருப்தி இல்லாமல் இருக்கின்றன. வியாபாரிகள் இதர சுய தொழில் உள்ளவர்களுக்கு, பண நெருக்கடி இல்லை. பழைய கடன்கள் உண்டாக்கும். புத்திரன், புத்திரியர்களின் குடும்ப உயர்வு, கல்வி முன்னேற்றமும், திருப்தியாக இருக்கும்.

### தனுசு
(மூலம் , பூராடம், உத்தராடம் 1)

இந்த மாதம் 11இல் இருக்கும் குரு நல்லவனே. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்குப் புதிய சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதை நடைமுறையில் உணரலாம். குறையாக விட்ட வேலைகள் முடிப்பதற்கு அலைச்சல் இருக்கும். ஆனால் காரிய வெற்றியும் இருக்கிறது. வாக்கு நாணயத்தைக் காப்பாற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும். இப்போது பழைய நண்பர்கள் சிலரை சந்திக்க வேண்டிய அவசியமும் உண்டாகும். உடன் இருப்பவர்களின் உயரிய ஆலோசனையை நீங்கள் மதிக்க வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட நெருக்கடி நிலையைப் போக்க முடியும். தன நிலை சுமாராகவே இருக்கும். கடன் விஷயத்தில் கவனம் செலுத்துவது நல்லது. வழக்குப் பாதிப்பு இல்லை. குடும்பத்தில் மூத்தவர் வகைக்கு மருத்துவச் செலவு முக்கியம் வாய்ந்ததாகவும் இருக்கும். செய்தொழில் வழி அன்றி வேறு வகையிலும் தன ஆதாயம் பொருள் வரவு, கட்டடம் கட்டவது போன்ற நன்மைகளைச் செய்யும். சுகாதிபதி சார சனி, வெளியிடத்து சுகத்தையும் கொடுக்க வல்லது. பழைய காரியங்கள் சில புதுப்பிக்கபட்டு நன்மை அளிப்பதாக இருக்கும். சனி உங்கள் ராசிக்கு 6-7க்கு உரியவன் என்பதால் இல்லற அமைப்பை இனியமையாக்குவான். எழுத்து, கலைத்துறை சம்பந்தம் உடையவர்களுக்கு கணிசமான ஆதாயமும் உண்டாக்கும். அரசாங்க வழயில் சில வழி எழுத்து ஆதாரம் அனுகூலமும் கிட்டும். அரசியல் மனிதர்கள் தொடர்பு சிக்கலை உருவாக்கும். உடனிருப்பவர்கள் முதல் மேல்மட்ட அதிகாரிகளும் உங்கள் அன்பு பண்புக்குக் கட்டுப்பட்டவர்களே. இந்த ராசியை உடையவர்கள் திருமணம் ஏற்பதும், கீழ்நிலையில் உள்ளவர்கள் இப்போது உங்கள் குணாதிசயங்களைப் பாராட்டுபவராக இருப்பர். காலக்கோடுகள் அனுகூலமாக இருக்கின்றன. கடன் வரவு எதிர்பார்த்தது உடனே வந்து சேரும். செய்தொழில் வழியில் சலனம் இல்லை. மேல்மட்ட மனிதர்களின் தொடர்பு மேன்மை மிக்கது. குடும்ப உறவிலும், எதிர்பார்த்தைதைவிட இணக்கமாக எல்லாம் இருப்பதால் நீங்கள் உங்கள் பாதையில் நம்பிக்கையோடு செல்லலாம். கொடுக்கல், வாங்கலில் சில சமயம் மந்தமாக இருந்தாலும், குறிப்பிட்ட காரியங்கள் வெற்றியோடுதான் முடியும். சிலருக்கு இப்போது நட்பு அல்லது தொடர்பு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. தொழில் வெற்றியோடு தான் முடியும். சிலருக்கு இப்போது நட்பு அல்லது தொடர்பு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. தொழில் வழி காரிய சாதனைக்கு வேண்டிய பொய் பேச வேண்டிய அவசியமும் உண்டாகும். இழந்த நண்பர்களின் தொடர்பு மீண்டும் இப்போது கூடும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் வட்டார மனிதர்களால் இருந்து வந்த தொல்லைகள் நீங்கிவிட்டன. செய்தொழில் வகையில் வேகமான செயலுடையவர்கள் நீங்கள். சத்துரு கடன் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைப்பதை விட படிப்படியே குறையும் என்பதுதான் சிறப்பானது.

### மகரம்
(உத்தராடம் 2 , 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2 )

இப்போது சனி வக்ரமாகிவிட்டானே, நீங்கள் செய்வதெல்லாம் ஆக்கபூர்வமாக நிலையானதே. குழந்தைகள் ஆரோக்கியம் திருப்தியானதே. வழக்கு வேகமில்லை. கடன் கட்டுப்பட்டிருக்கின்றன. புண்ணிய ஸ்தல பிரயாணம் மேற்கொள்வது மனத்திருப்தியளிக்கும். விருந்துண்பது வேடிக்கை நிகழ்சிகளை அனுபவிப்பதும் உண்டாகும். கருமச் செலவுங்கூட இடம்பெற வாய்ப்பு உண்டு. குழந்தைகள் வகை மருந்து செலவுங்கூட இருக்கும். முதலிலேயே உங்கள் தன முயற்சியை வைத்துக்கொள்வது நல்லது. மேலும், உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலகத்தில் மட்டுமல்ல வீட்டிலும் வெட்டிப் பேச்சில் வம்பை வளர்க்க வேண்டாம். அரசாங்க மேல் அதிகாரிகள் உங்களுக்கு இணக்கமானவர் அல்ல. கூடுமான வரையில் விலகி நின்று வேலையைக் கவனியுங்கள். பெரும் தொழிலில் முயற்சி தோல்வியில் முடியும். இதற்கு முன்பு ஏற்பட்ட வழக்கு வகையிலும் இப்போது முடிவு தெரியும். என்பதால் தள்ளிப்போட்டுக் கொள்வது சிறப்பாக இருக்கும். ஆனால் கடத்திக் கொண்டே போவது சிரமம். கணவன், மனைவி உறவு கனிவு கொண்டதாக இருக்கும். எழுத்து மூலம் எதிர்பார்த்த விஷயங்கள் சாதகமாக இருக்காது. கொடுத்து வைத்த பொருளை கேட்டாலும் திரும்பப் பெறமுடியாது. ஒன்றுக்கு செலவிடும் அவசியம் உண்டாகும். எனவே, பண விஷயத்தில் ஒரே சீரான ஆரோக்கிய வகையிலும்- அப்படியே சிலர் பகைபட்டு விலகியும் இருப்பர். கொடுக்கல், வாங்கலில் சற்றுப் பிடிப்பான நிலையே இருக்கும். அனுகூல ஓரைகள், பெண்களுக்குப் புதிய உடைகள் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு பதவி உயர்வு அல்லது மாற்றமும் முக்கிய அம்சமாக இருக்கும். குடும்ப உறவில் கருமச் செலவுங் கூட இடம்பெறும். தன நிலையில் இடையிடையே தட்டுப்பாடு இருந்து கொண்டு தான் இருக்கும். உங்களுக்கு வரவேண்டியவை காலத்தே வந்து சேராமையினால் உடன் இருப்பவர், கருத்து வேற்றுமைக்கு ஆளாக வேண்டி இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு ஈடுபாடுவேண்டாம். இவை முடித்து வைத்து இருந்தது, கடைசி கட்டத்தில் நின்றுவிடும். தேக சுகத்திறகுப் பெரும் குறை ஏதும் இல்லை. சீதள பாதிப்பு மருந்து குற்றச்சாட்டை உண்டாக்கும். பெண்களிடத்தில் முன்யோசனையுடன் இருக்க வேண்டும். உடன் இருப்பவரையும் சந்தேகக் கண்களோடு பார்க்கும் காலம். தன் தொழில் வழி முழுவதும் திருப்தியாக இருக்கும். அலைச்சல், அகால உணவு, அகால உறக்கம் உள்ள காலம்தான். சிலருக்கு முகம், மூக்கு இந்தப் பகுதியில் பாதிப்பு உண்டாக்கவும் செய்யும். குடும்ப பாகப் பிரிவு அல்லது சொத்து வகைப் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கும். சனி படுக்கையும், சுகத்தையும் குறைக்கவே செய்யும். பழைய கடன் விஷயத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டிய காலமிது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்குப் பழைய சூழ்நிலை தொடர்ந்து இருக்கத்தான் செய்யும்.

### கும்பம்
(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3)

இப்போது வாக்கு இல்லத்து ராகு, இது குடும்பத்து எல்லையுங் கூட உங்கள் வார்த்தையில் சுத்தம் இருக்காது. இது பெரும் குறையானதே. இப்போது நன்மை, தீமை ஆகிய இரண்டும் கலந்த பலன்களை உடையவர்களே. தொழில் சம்பந்தமான தடைகளை அகற்ற அதிக முயற்சி உடையவர்களாக இருக்கின்றீர்கள். மருத்துவச் செலவுகளும் இடம்பெறும். பழைய நண்பர்கள் சிலர், உங்கள் வழிக்கு இணங்கி வராத போக்கு உங்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கிவிடும். சகோதர, சகோதாரி வகையும் அப்படியே. சிலர் நாகரீக வாகனம் விற்பது, மாற்றி அமைப்பதும் உண்டாகும். நீங்கள் வெற்றி தோல்வியைப் பற்றி கவலைப்படாதவர் அல்ல என்றாலும், இக்காலம் முக்கியஸ்தர் மூலம் முயன்று தொழில் சம்பந்தமான உங்கள் புதிய முயற்சிகள் திருப்திக்குரிய அளவு இயக்கம் உடையதாக இருக்கும். புத்திரியர்கள், புத்திரர்கள், ஆரோக்கியம், கல்வியும் கவர்ச்சிகரமாகவே இருக்கின்றன. முன்னைவிட ஒரே சீரான தொழில் போக்கு உடையவர்கள். தன நிலையில் திருப்தியான போக்கு இருக்கும். தேவை உடனுக்குடன் பூர்த்தியாகிக் கொண்டே வரும் நண்பருக்கு உபகாரம் செய்ய வேண்டியவர்கள் நீங்கள். பூமி, வீடு போன்ற வழிகளிலும் தன ஆதாயத்தைப் பெறுவீர்கள். காலம் கடந்து தஸ்தாவேஜுகள் புதுப்பிக்கப்படுவதும் கூட உண்டாகும். வழக்கு இருப்பவர்களுக்கு முடிவு தள்ளிப்போய்விடும். கீழ்நிலை ஊழியர்கள் தொடர்பு நெருங்கியதாக இருக்கிறது. தன்னம்பிக்கை வளர்ந்துவரும் காலமே. காதல் கல்யாணம் சம்பந்தமான கடிதத் தொடர்புகளுக்கு ஏற்ற காலமிது. உறவினர்கள் மூலம் உருவான சிக்கல் வளர்ந்து கொண்டே வரும். உறவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு இப்போது மறைந்துவிடும். புத்திரன் அல்லது எழுத்து வகையிலும் எதிர்பாரா நன்மைகளை உண்டாக்கும். விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவித்தலும் உண்டாகும். குடும்பத்திற்கு பட்டாடை, சித்திரக்கலைப் பொருட்கள் சேர்க்கை, பெண்களுக்கு நல்ல உணவு, உடைகள், சித்தி சந்தானம் இல்லாதவர்களுக்குப் புத்திரபேறு கிட்டுவதும் குறிப்பாக சிறப்பு. புத்திரபேறு நன்மைகளாகும். வீடு புதுப்பித்தல், வாகனம் புதுப்பித்தல் போன்ற வழிகளில் செலவுகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கும் குறிப்பாக இது உயர்வு அளிக்கும். அரசியல்வாதிகளுக்கு கௌரவ உயர்வு இருக்கும். மேலும் சனியின் தன்மை உங்களுக்கு எதிர்பாரா யோகத்தையும் உண்டாக்கும். முக்கிய பிரயாணங்கள் இரண்டு இடம் பெறும். ஜென்மச் செவ்வாய் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்யும். காதல் புதிய நட்பு உண்டாவதும் கூட உண்டு. கணவன், மனைவி இடையில்சிறு, சிறு சலனப் போக்கு இல்லாமல் இல்லை. சூரியனும் புதனும் சுற்றி வளைக்கப்பட்ட சுக்கிரன் என்பதை மறக்க முடியாது.

### மீனம்
(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி )

இப்போது வக்ர சனி கௌரவ இல்லத்தில். இதனால், நீங்கள் கேளிக்கை விருந்து வகைக்கு செலவழிக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். இப்போது நல்ல நண்பர்கள் சிலரையும் பெறுவீர்கள். ஏதோ நினைத்து மனதுக்குள் மத்தாப்பு தான். எதிலும் மகிழ்ச்சியான சூழ்நிலையே இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் சற்றுக் கவர்ச்சி மிகுந்ததாகக் காணப்படுகிறது. உற்சாகக் கடிதம் வருதல் உவகை தரும் நட்பு வகையினரை சந்திப்பது, சிறு சிறு அரசியல்வாதிகளுக்கு முன்பு பாதிக்கபட்ட பயம் இருக்கும் உங்களிடம் வழக்கத்திற்கு மாறான செயல்களை காணமுடிகிறது. இப்போது உங்கள் நண்பரும், உறவினரும் கூடி வந்து ஊழியம் செய்வர். சில வகையில் உங்கள் அணுகுமுறை மற்றவர்களால் பாராட்டப்படும். கணவன், மனைவி இடையே நல்ல கருத்துக்கள் உதயமாகும். பெருமைக்குரிய பெரிய திட்டங்களை உருவாக்குவீர்கள். எதிர்பார்த்த பணம் உரிய காலத்தே வந்துவிட்டதால், திட்டங்களுக்கும் வெற்றி நிச்சயம் என்ற நிலை உருவாகிவிட்டது. சகோதார, சகோதரி வகைக்கு உபகாரம் செய்வது இருக்கும். எதிரியாக இருந்த சிலரும் இப்போது எதிரில் வந்து உதவி புரிவர். தூரத்துக் கடிதம் தொழில் வகைக்கு அனுகூலமாக வந்து சேரும். கல்யாணமும் கூடி வந்துவிடும் தொழில் வாழ்க்கை நிலையும் சிறக்கக் குரு ஆசி புரிகிறான். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் ஆரம்பமே நல்லதாக இருக்கிறது என்றாலும் செலவோடு ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மாணவ, மாணவியர்களுக்கு மகிழ்ச்சியான போக்கு தொடர்ந்து இருக்கும் நல்ல மாதமே. உங்கள் அலுவலங்கள் தெளிவான நிலையில் சென்று இருக்கும். நல்ல தேவைகள் பூர்த்தியாவதிலும் கூட தடை இல்லை. சகோதர வகையில் மனபேதமும் இருக்கத்தான் செய்யும். பிரயாணம், உறவினர் இல்லமதில் விருந்து உண்பது போன்றவையும் இருக்கின்றது. சுப விஷயம் குறித்து பேச்சுக்கள் திருப்தியாக இருந்தாலும் முடித்து வருவது தாமதப்படுகிறது. வெளியூர்ப் பயணம் அடிக்கடி இருக்கும். காதல், கல்யாண முயற்சி, ஆபரணங்கள் வாங்குவது இரகசிய கடிதம் எழுதுவதும் ஆகும். குழந்தைகள் ஆரோக்கியம் குறித்தபடி தெளிவாகவே இருக்கின்றன. நீங்கள் எதிர்பார்த்த மாற்றத்தை இப்போது பெறுவீர்கள். குடும்பத்தில் இனிமையான சூழ்நிலை எல்லோர்க்கும் இன்பம் தருவதாக இருக்கும் குழந்தைகள் மகிழ்ச்சி மிக்கவர்கள். குடும்பத்தில் பெண்களுக்கு வெண்மை நீலக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். வாகனச் சேர்க்கை, திடீர் பிரயாணம், ஸ்தல தரிசனம் உண்டாகும்.

(தொடரும்...)

# ஏமாற்றிவிட்ட 2005

## வலம்புரி நினைவுக் குறிப்பு

## பெப்ரவரி

02.02.2005 *யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடன் சந்திப்பு.

03.02.2005 *நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேனார்ட் பெற் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனும், அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவுடனும் சந்திப்பு.



04.02.2005 *இலங்கையின் 57ஆவது சுதந்திர தினம் யாழ்.குடா நாட்டில் துக்கதினமாக அனுஷ்டிப்பு.

05.02.2005 *நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கா, அவரது குழுவினர் வடக்கு - கிழக்கு மனித உரிமை செயலகத்தில் உளவளத்துணை நிபுணர்களுடன் சந்திப்பு, சு.ப. தமிழ்ச்செல்வனுடனும் சந்திப்பு மேற்கொண்டனர்.

07.02.2005 *ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பாகிஸ்தான் பயணம்.



*மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட நால்வர் பொலநறுவையில் சுட்டுக்கொலை. தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பா.உ.அரியநாயகம் சந்திரநேரு காயம்.

*ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் இவான்ஸ் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியுடன் சந்திப்பு.

08.02.2005 *த.தே.கூட்டமைப்பின் பா.உ.சந்திரநேரு மரணமடைந்தார்.

09.02.2005 *இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வருகை.

*கௌசல்யனின் படுகொலையைக் கண்டித்து மட்டக்களப்பில் துக்கம் அனுஷ்டிப்பு.

10.02.2005 *கௌசல்யன் உள்ளிட்டபோராளிகளின் வித்துடல்கள் மட்டு.தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் விதைப்பு.

*மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக மார்ஷல் நியமனம்.

12.02.2005 *யசூசி அகாஷி சு.ப.தமிழ்ச்செல்வனுடன் மட்டக்களப்பில் சந்திப்பு.



*கௌசல்யனின் படுகொலையைக் கண்டித்து யாழ். குடா நாட்டில் துக்கம் அனுஷ்டிப்பு. இராணுவக் காவலரண்கள் எரிப்பு.



*தென்னிலங்கையிலிருந்து வருகை தந்திருந்த சர்வமதக் குழுவினர் தமிழீழ மாணவர் பேரவையினருடன் சந்திப்பு.

14.02.2005 *கிழக்கு மாகாணப் படுகொலையைக் கண்டித்து யாழ்.நகரில் வாகனப் பேரணி

15.02.2005 *கிழக்கு மாகாணப் படுகொலையைக் கண்டித்து யாழ்.மாவட்டக் கூட்டுறவாளர்கள் கண்டனப் பேரணி.

*விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - எரிக்சொல்ஹெய்ம் லண்டனில் சந்திப்பு.

16.02.2005 *கிழக்கு மாகாணப் படுகொலையைக் கண்டித்து யாழ்.கல்விச் சமூகம் பேரணி.

*பொகவந்தலாவையில் பாரிய தீவிபத்து 47 கடைகள் மற்றும் 4 வீடுகள் முற்றாக எரிந்து நாசம்.





17.02.2005 *கிழக்கு மாகாணப் படுகொலையைக் கண்டித்து யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் பேரணி.

*ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் மணிலால் பெர்னாண்டோ யாழ்.வருகை.



20.02.2005 *அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன், ஜோர்ஜ் புஷ் ஆகியோர் இலங்கை வருகை.



*அமெரிக்க யுத்தக் கப்பலான 'வுளூறிச்' கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.



*சந்திரிகா - மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் சந்திப்பு.



22.02.2005 *எரிக்சொல்ஹெய்ம் - சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு.

*ஜேர்மன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் திருமதி ஹயிடி மாறி விச் சொறி ஹெக் சொயில் யாழ்.வருகை.



23.02.2005 *எரிக்சொல்ஹெய்ம் வடமராட்சியில் சுனாமியால் பாதிப்புற்ற பகுதிகளைப் பார்வையிட்டார்.

*தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாமனாரும், நாட்டுப்பற்றாளருமான ஏரம்பு மாஸ்ரர் காலமானார்.

24.02.2005 *வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா பயணம்.


26.02.2005 *இந்தியத் தூதுவர் நிருபமாராவ் பருத்தித்துறை விஜயம் சுனாமி அழிவுகளைப் பார்வையிட்டார்.

*கண்டியில் பாடசாலை வான் குடை சாய்ந்து 8 மாணவிகள் பலி.

28.02.2005 *எரிக்சொல்ஹெய்ம் இந்தியா பயணம்.

*இளவரசர் சார்ளஸ் இலங்கை வருகை.

## உலக அரங்கில்



02.02.2005 *நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பு.

14.02.2005 *லெபனானில் குண்டுவெடிப்பு, முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி பலி. 100 பேர் காயம்.

15.02.2005 *சீன நிலக்கரிச் சுரங்கத்தில் தீ விபத்து. 203 பேர் பலி.

17.02.2005 *ஈராக்கிய பாராளுமன்றத் தேர்தலில் சியா கூட்டணி வெற்றி பெற்றது.

21.02.2005 *இந்தோனேசியாவில் நிலச்சரிவு 150 பேர் பலி.

22.02.2005 *காஷ்மீரில் பனிப் பொழிவு. 300 பேர் பலி.

28.02.2005 *ஈராக்கில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல். 125 பேர் பலி.

(தொடரும்...)

# தேசிய கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை - 2006

*(நேற்றைய தொடர்ச்சி...)*

ரி.காயத்ரி (வல்வெட்டித்துறை), ஐ.எல்.சபீனா (அடடாளைச் சேனை - 02), எம்.வை.எம்.தர்சீவ் (மருதமுனை - 6), ஏ.எல்.எம்.ஹரித் (சாய்ந்தமருது- 10), ஏ.பௌசுனா (சம்மாந்துறை-2), ஆர்.நிலாஜினி (அக்கரைப்பறறு), கே.நிரோஜினி (வட்டகொட), எஸ்.ரி.எஸ் நஸ்மியா (ஏறாவூர்-1), எம்.உதயா (காரைநகர்), எஸ்.திருக்கேதீஸ்வரன் (பருத்தித்துறை), ரி.தவராஜா (மிருசுவில்), எஸ்.ராஜரட்ணம் (நீர்வேலி), பி.பிரதீபா (யாழ்ப்பாணம்), கே.தினேஷ் (யாழ்ப்பாணம்), எம்.வத்ஷன் (வவுனியா), என்.சுதாகினி (கரவெட்டி), கே.மைதிலி (சாவகச்சேரி), எஸ்.மதுரா (சுன்னாகம்), என்.சிவரஞ்சனி (மூதூர்), கே.கே.சர்மினி (சாவகச்சேரி), எஸ்.தேனுகாந்த் (பருத்தித்துறை), எஸ்.சிவகரன் (சாவகச்சேரி), எஸ்.நாராயணி (அச்சுவேலி), வி.மேரியூடிற் (வவுனியா), வை.முகுந்தன் (யாழ்ப்பாணம்), என்.ஆர்திகா (இணுவில்), ரி.வதனகுமாரி (மூதூர்), பி.தர்மசீலன் (கொக்குவில்), கே.சுதர்சன் (திருக்கோவில் -1), எஸ்.கமலேஸ்வரன் (மீசாலை), ஆர்.நிலானி (வவுனியா), ரி.மகாதேவன் (ஏழாலை), கே.பூபாலசிங்கம் (கிளிநொச்சி), எம்.செல்வபாலினி (நயினாதீவு), எம்.ஆனந்தராஜா (மட்டக்களப்பு), ஏ.தாரகா (திருகோணமலை), எஸ்.எனிற்டா (மன்னார்), கே.அருள்வாணி (கல்முனை).

கே.கிருஷ்ணபிள்ளை (நாகர்கோவில்), எஸ்.வசீகரநாதன் (வரணி), ஈ.ராஜநந்தினி (வவுனியா), ஏ.கே.சவானா (அட்டாளைச்சேனை -2), ஏ.தர்மலிங்கம் (மட்டக்களப்பு), எம்.எஸ்.எம்.எஸ்.எஸ்.சல்மியா (புத்தளம்), எஸ்.மதனிகா (சாவகச்சேரி), எஸ்.நிசாந்தினி (யாழ்ப்பாணம்), பி.ஸ்ரீபன் (பளை), ரி.நவரட்ணமலர் (பருத்தித்துறை), ரி.வதனரூபன் (மிருசுவில்), என்.சுபாஷினி (மொனராகல), கே.சுதாமதி (சாவகச்சேரி), எம்.கீதாஞ்சலி (கரவெட்டி), ஏ.ஜெயநேசன் (முல்லைத தீவு), ஆர்.தர்மிளா (மட்டக்களப்பு), ஏ.பகவதி (மட்டக்களப்பு), என்.மனோகரன் (திருகோணமலை), கே.மேனகா (பதுளை), ஜே.மதுரா (வரணி), எம்.நிரோஜினி (குருக்கள்மடம்), கே.பத்மாவதி (வட்டக்கச்சி), என்.பாமினி (யாழ்ப்பாணம்), எஸ்.காராளசிங்கம் (கரவெட்டி), கே.காந்திமதி (மட்டக்களப்பு), ஆர்.காயத்ரி (வல்வெட்டித்துறை).

கே.தர்சினி (கல்முனை), என்.தவராஜா (முல்லைத்தீவு), பி.அனிதா (தாளையடி), ஆர்.சசிகரன் (முல்லைத்தீவு), எம்.உஷாபேபி (உரும்பிராய்), ஜே.பவித்ரா (கல்முனை), வி.விஜயதர்சினி (கிளிநொச்சி), என்.வதனகீதா (கரவெட்டி), ஏ.பக்திநாதன் (கோப்பாய), ஆர்.றமான்ஜனா (வவுனியா), கே.விஜயகாந்தன் (கொடிகாமம்), எஸ்.எல்.நவாகிர் (கல்முனைக்குடி -4), ரி.தவயோகினி (வவுனியா), எவ்.டி.வசந்தகுமார் (மன்னார்), கே.மைதிலி (முள்ளியவளை), வி.குமணரஞ்சனி (பரந்தன்), என்.சுதா (கரவெட்டி), எஸ்.பிரதீபன் (மானிப்பாய்), ஐ.விஜயகரன் (வாழைச்சேனை), கே.கனகலிங்கம் (கல்லாறு), ஏ.பிரபாகர் (புதுக்குடியிருப்பு), ரி.பிரபாகர் (கல்முனை), என்.அனிதா (மானிப்பாய்), பி.ஜெயசீலன் (ஈச்சிலம்பற்று), கே.மதிரூபன் (கோண்டாவில்), கே.சுவேதா (சாவகச்சேரி), ரி.கார்திகா (முள்ளியவளை), ஏ.அஜனி (கல்முனை), எஸ்.பிரகரன் (தேத்தாதீவு), எவ்.ஏ.கிருசாந்தினி (மாத்தளை), ரி.அகிலன் (மூதூர்), கே.ஜெசிந்தா (பூநகரி), பி.மோகன்ஜா (யாழ்ப்பாணம்), எஸ்.கமலேஸ்வரன் (ஈச்சமோட்டை), கே.மீரா (முள்ளியவளை), எஸ்.சிறீசாலினி (தெகிவளை).

எஸ்.சிவதர்சி (கோண்டாவில்), எஸ்.செந்தூர்ச்செல்வன் (வவுனியா), வி.விநோதினி (கிளிநொச்சி), பி.கயல்விழி (மட்டக்களப்பு), ஜே.ஞானசௌந்தரி (யாழ்ப்பாணம்), எம்.ஜெயக்குமார் (தம்புலுவில்), ஈ.ஜெயபிரகாஷ் (யாழ்ப்பாணம்), டி.ஜொய்சி (வவுனியா), கே.நிரஞ்சனி (வவுனியா), வை.செல்வராஜா (நீர்வேலி), எம்.சி.சித்தி றிஸ்ஜா (மட்டக்களப்பு), எஸ்.செல்வரட்ணம் (வவுனியா), ஆர்எவ்.சித்ரா (வவுனியா), எஸ்.சுதர்ஷன் (களுவாஞசிக்குடி), ஜி.ஐங்கரன் (யாழ்ப்பாணம்), ஏ.சந்திரிக்கா (தம்புலுவில் -1), சி.எல்.கல்ஷியா (ஏறாவூர் 3A), பி.காயத்ரி (உடுப்பிட்டி), எம்.குமுதன் (காரைதீவு -1), என்.புஷ்பா (களுவாஞ்சிக்குடி), கே.ரேணுகா (வல்வெட்டித்துறை), ஏ.ரேகா (முல்லைத்தீவு), எஸ்.எஸ்.ராசகரம் (வவுனியா), ஜி.சந்திரகலா (முல்லைத்தீவு), ஏ.எம்.முகமட் இம்ரான் (கிண்ணியா -6), எஸ்.சாரண்யா (காரைதீவு -10), எவ்.ஏ.ஜெயந்தன் (மன்னார்), எஸ்.பிரவிணா (சுன்னாகம்), என்.ரூபகாந்த் (வாழைச்சேனை), பி.ஜி.பெனாண்டோ (மன்னார்).

ஈ.ரவிச் செல்வன் (மல்லாவி), எஸ்.ஏ.எம்.றிசாந் (ஏறாவூர்-2), வை.கமலினி (கல்முனை), கே.அஜந்தினி (பருத்தித்துறை), எஸ்.புகீந்திரன் (மானிப்பாய்), எஸ்.கவிதா (சாவகச்சேரி), ஏ.கோபிலன் (களுவாஞ்சிக்குடி), எம்.சுபத்ரா (முள்ளியவளை), எஸ்.நீலா (தம்பலகாமம்), எஸ்.றிஸ்வானா (மாளிகைக்காடு), ஏ.ஏ.சர்மிளா (சம்மாந்துறை), பி.கோபிகா (கோணடாவில்), ரி.சிவதர்சினி (யாழ்ப்பாணம்), பி.பிரகலாதன் (பூநகரி), ரி.பிரபாகனி (புத்தூர்), வி.குமுதினி (மடுசேச்), வி.சர்மிளாதேவி (கல்முனை), எம்.எல்.அமீர் (சம்மாந்துறை), எஸ்.கவிதா (தெல்லிப்பழை), கே.நர்மதா (மட்டக்களப்பு), பி.சுதர்சன் (கிளிநொச்சி), எம்.குணசேகரன் (வவுனியா), ரி.காயத்ரி (வல்வெட்டித்துறை), ரி.குலகோதை (பரந்தன்), எஸ்.சந்திரன் (அல்வாய்), எஸ்.விக்ரோறியா (பசறை), வி.துஷ்யந்தன் (காரைதீவு -12), ரி.நிசாந்த் (வல்வெட்டித்துறை), பி.விஜயவரதனி (கரவெட்டி), எஸ்.யோகேஸ்வரன் (வந்தாறுமூலை), ஆர்.இளங்கீரன்( வவுனியா), பி.பிரதீபா (மாத்தளை), எஸ்.ஜே.ஜிசாவிலி (மாத்தளை), எஸ்.தில்லைநாயகி (மாத்தளை), ஆர்.பிரேமலதா (மஸ்கெரியா), பி.யோகேஸ்வரன் (கலகாநனோயா), பி.சசிப்பிரியா (சாவகச்சேரி), எஸ்.எஸ்.பிரேமிகா (லிண்டுவ), ஆர்.உமாமகேஸ்வரி (கொட்டகல), எஸ்.கவிதா (மஸ்கெரியா), பி.ஆர்த்தி (ஹற்றன்), ரி.கோகிலவாணி (நானுஓயா), வி.துளசி (அச்சுவேலி), ஜே.ஜெனனி (கொடிகாமம்), எஸ்.மதிஉதயா (புலோலி), கே.எஸ்.கலிங்கம் (யாழ்ப்பாணம்), பி.சர்மிளா (சாவகச்சேரி), ஆர்.சாதனா (அல்வாய்), ரி.தவராஜா(யாழ்ப்பாணம்), ஏ.கவிதா (கைதடி), ஜி.பாமினி (பண்டத்தரிப்பு), எஸ்.திருவதனா (குடத்தனை), ஆர்.சுகனயா (மீசாலை), ரி.தர்மினி (சுன்னாகம்).

என்.திருவானி (வரணி), பி.சுதர்சன் (மானிப்பாய்), எஸ்:வினோத் (வரணி), எஸ்.வித்யா (கரவெட்டி), கே.மேகலா (சாவகச்சேரி), ரி.றதிகா (கைதடி), எஸ்.திலக் (யாழ்ப்பாணம்), ஏ.சிவசீலன் (கரவெட்டி), ரி.றஜனி (யாழ்ப்பாணம்), வி.மைதிலி (அல்வாய்), கே.கலைவாணி (காரைநகர்), வி.சோதினி (கைதடி), என்.தாரணி (மிருசுவில்), வி.லாவண்யா (யாழ்ப்பாணம்), எல்.முத்துக்குமாரசாமி (நெடுந்தீவு), எஸ்.தமோதரன் (யாழ்ப்பாணம்), ரி.விஜிதலோஜினி (சுன்னாகம்), ஜே.ஜெயசிந்தன் (புலோலி), ஆர்.சர்மிளா (கரவெட்டி), எஸ்.சீவரஞ்சனி (யாழ்ப்பாணம்), கே.சுகந்தினி (வல்வெட்டித்துறை), வி.ஜீவநாதன் (வரணி), எஸ்.சுகன்யா (கரவெட்டி), கே.ராஜகுமார் (மானிப்பாய்), எம்.ஏலாயஸ் அங்கில்ஸ் (யாழ்ப்பாணம்), பி.தீபன் (சாவகச்சேரி), எஸ்.சசீனா (அல்வாய்), கே.சுகிர்திகா (புலோலி), எஸ்.பிரபாகரன் (மிருசுவில்), வி.சிவப்பிரகாசம் (சாவகச்சேரி), ஜி.கோமதி (கரவெட்டி), ரி.செந்தில்குமார் (தாளையடி), கே.சுபராஜ் (தாளையடி), கே.வினோதா (புலோலி), ஜி.கோபிலன் (யாழ்ப்பாணம்), எம்.பிரதீபன் (கொடிகாமம்), பி.மதீபன் (வரணி), வை.சங்கீதா (யாழ்ப்பாணம்), ரி.சுகந்தினி (காரைநகர்), கே.பவானி (அல்வாய்), எஸ்.லஷ்மிகாந்த் (கரவெட்டி), வி.பிரிந்தா (கைதடி), எஸ்.லுசானா (யாழ்ப்பாணம்), யு.புவிதா (வரணி), ஆர்.சர்மிளா (வட்டுக்கோட்டை), ஏ.கயானா (உரும்பிராய்), எஸ்.துரைராஜா (கரவெட்டி), எஸ்.லவகலா (பூநகரி), எஸ்.சந்திராதேவி (கிளிநொச்சி), பி.தர்சிகா (பூநகரி), கே.சுதாகரன் (பூநகரி), ஈ.றகிப் (கிளிநொச்சி), சி.சசிகலா (கிளிநொச்சி), பி.உமாகாந்தன் (கிளிநொச்சி), எஸ்.தர்சிகா (கிளிநொச்சி), ஜே.ஜெயகிருஷ்ணா (பூநகரி), எஸ்.சுதாகரன் (மன்னார்), எஸ்.சதாலோஜினி (மன்னார்).

ரி.மரியகுறுஸ் (சிலாபத்துறை), வி.ஜே.பிரதீபன் (முருங்கன்), பி.சியாமளா (அடம்பன்), எஸ்.ஜெஸ்ரின (விடத்தல்தீவு), எஸ்.ஏ.ஆர்.கொன்ச் (மன்னார்), எஸ்.சிவகௌரி (முல்லைத்தீவு), ரி.திருநாவுக்கரசு (உடையார்கடடு), எஸ்.நீயூற்றன் (முல்லைத்தீவு), எஸ்.ரமேஷ் (முல்லைத்தீவு), எஸ்.மாதுமை (உடையார்கட்டு), வி.ஜெயரஞ்சனி (யாழ்ப்பாணம்), ரி.சிறீகுமார் (ஒட்டிசுட்டான்), என்.அருஞ்சோதி (முல்லியவளை), ஜி.டுர்னலா (அல்வாய்), ஜே.ஜெயசுதா (வவுனியா), எஸ்.வேலுப்பிள்ளை (வவுனியா), வி.ஜெசிந்தா (பாலமோட்டை), ஜே.சுயன்த் (வவுனியா), ரி.வித்யா (வவுனியா), எம்.எம்.எம்.ஜே.குறூஸ் (முருங்கன்), ஈ.கோபாலசிங்கம் (வவுனியா) ரி.செல்வராஜா (வவுனியா), கே.சுகிர்தன் (நெடுங்கேணி), பி.றொபேட் றீகன் (வவுனியா), வி.பிரியதர்சினி (பாலமோட்டை), ஜி.கமலினி (வவுனியா), எம்.எம்.எஸ்.கோச் (முருங்கன்). ஈ.நகுலேந்திரன் (வவுனியா), ஏ.சிறிகலா (வவுனியா), ஏ.எல்.முஜீபா (கிண்ணியா), எம்.பத்மினி (திருகோணமலை), எஸ்.நடேசபிள்ளை (ஈச்சிலம்பற்று), எம்.சிறீதயானி (திருகோணமலை), டி.டயானா காந்தி (மூதூர்), ஏ.எல்.எஸ்.சரினா (கிண்ணியா -3), யு.ஆர் உமுல் றஸ்னா (கிண்ணியா 5), பி.யாழினி (திருகோணமலை), வி.நிவேதிகா (மூதூர்), எல்.சுமந்தி (மூதூர்), எம்.அருணா (மூதூர்), எஸ்.வசந்தநேசன் (தம்பலகாமம்), எஸ்.லவசுதன் (மூதூர்), எஸ்.லவலோஜினி (திருகோணமலை), எஸ்.பிரதீபன் (திருகோணமலை), யூ.ரம்சான (கிண்ணியா), எஸ்.கோமகள் (திருகோணமலை), எஸ்.சந்திரப்பிரியா (மல்வத்தை -1), ஐ.எல்.இர்வானா (சாய்ந்தமருது), ரி.யோகேஸ்வரன் (செல்வபுரம்), கே.தேவதாசன் (கல்முனை), பி.சுஜா (தம்புலுவில் - 2), கே.ரவீந்திரன் (திருக்கோவில் - 3), எம்.எச்.பினோஜா (மாளிகைக்காடு - 1), எவ்.முகமட்சியாசி (நிந்தவூர் -13), எஸ்.யாழினி (தம்புலுவில்), எம்.ஏ.உமைல் பாஜிமா (சம்மாந்துறை -1), என்.இந்திராகாந்தி (தம்புலுவில் -1).

கே.எம்.அன்சார் (சம்மாந்துறை), என்.பிரிசோத் (திருக்கோவில் -1), எம்.சர்மிளா (அக்கறைப்பற்று), எஸ்.ஜெயவதனி (திருக்கோவில் -1), ஜே.உகந்தமலர் (மல்வத்தை -2), எம்.எல்.எவ்.றிஸ்லத் (சம்மாந்துறை-5), ஏ.எஸ்.சவீனா (சாய்ந்தமருது -10), எம்.பி.எம்.பர்சான் (ஒலுவில் -3), எம்.எவ்.பர்சானா (சம்மாந்துறை), ஏ.விஜயகலா (கல்முனை), எம்.ஐ.ரோஜிபனூண் (சாய்ந்தமருது -12), எம்.கலைவாணி (தம்புலுவில்), என்.நிரோஜினி (கல்முனை), ஏ.எல்.முகமட் அஸ்லம் (அட்டாளைச்சேனை -12), ரி.கலா (கல்முனை), எஸ்.தர்மினி (காரைதீவு-4), ரி.சிகானா (அட்டாளைச்சேனை -3), ரி.தணிகைச்செல்வி (கல்முனை), எம்.அசீனா பாதம் (ஒலுவில்-2), எம்.எஸ்.பாத்திமா சர்கானா (பொத்துவில் -7), எம்.எம்.ஹாசன் (சம்மாந்துறை), எம்.ஐ.ஷவீலா (சம்மாந்துறை -4), ஏ.எஸ்.அஸ்கானா (புத்தளம்), எம்.என்.மும்தாஜ் (கல்பிட்டி), என்.நிலிமியா (கல்பட்டி), ஏ.ஆர்.எம்.பீர்தௌன் (புத்தளம்), எஸ்.பி. ஆர்.பிரியதர்சினி (புத்தளம்), எம்.வை.பாத்திமா அவ்றோன் (புத்தளம்), ஆர்.எவ்.றஸமி (விஜிதபுர), எம்.கே.நிலாறா (விஜிதபுர), ஜே.ரிஸ்வான (கெக்கிராவ), ஆர்.கோமதி (மில பொட்ட), என்.வாசுகி (நமுனுகல).

*(முற்றும்)*


புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி 2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்! வாங்கத் தவறாதீர்கள்!


## இந்திய இலங்கை ஒப்பந்தம் கைவிடப்படும் நிலையில்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம், தமிழ்நாட்டின் பாரிய எதிர்ப்புக்களைத் தொடர்ந்து தற்போது கைவிடப்பட்டுள்ளது என்று கொழும்பின் ஆங்கில நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2004 ஆம் ஆண்டு நவம்பரில் புதுடெல்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட இரு நாட்டு கூட்டறிக்கையில் இந்த ஒப்பந்தம் பற்றியும் பலாலி விமானத்தளத்தை திருத்துவதற்கு இந்திய அரசின் உதவி பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்து.

அந்த உடன்படிக்கை கைச்சாத்தாவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து அப்போதைய அரசாங்கம் நெருக்கடி கொடுத்து வந்தது. அப்போதைய பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத் புதுடெல்லியில் பேச்சு நடத்தி சில திருத்தங்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருந்தது. அப்போதைய இந்திய பாதுகாப்புச் செயலர் தாய்லாந்து செல்லும் வழி யில் கொழும்பு வந்து அதில் கைச்சாத்திட ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் பின்னர் அது நடக்கவிலலை. இப்போது புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடெல்லிக்குச் சென்ற பின்னா வெளியிடப்பட்ட கூட்டறிக்கயில இந்த ஒப்பந்தம் பற்றி எதுவும் கிடையாது என்று இச் செய்தி சுட்டிக்காட்டுகின்றது. இதற்கிடையில் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது பற்றி இப்போது இரு தரப்பிடையேயும் அக்கறை செலுத்தப்படுவதாகவும் அச்செய்தி குறிப்பிடுகின்றது. (த)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

8 மீள்பார்வை


பெண் வேடத்தில் சிவாஜி

டி.எஸ்.என்: முதலில் நீங்கள் யதார்த்தம் பொன்னுசாமி நாடகக் கம்பெனி என்று சொன்னீர்களே?

சிவாஜி:'யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை நாடகக் கம்பெனி' என்பது கம்பெனியின் பெயர். அங்கே இரண்டு பொன்னுசாமிப்பிள்ளை இருந்தார்கள். ஒருவர் முதலாளி பொன்னுசாமி. மற்றொருவர் வாத்தியார் பொன்னுசாமி. எனவே பெரிய பொன்னுசாமி, சின்ன பொன்னுசாமி என்று சொல்வார்கள்.

என்னுடைய வாத்தியார் சின்ன பொன்னுசாமி படையாச்சி. சிதம்பரத்திற்கு பக்கத்தில் உள்ளவர். அவர்தான் எனக்கு நடிப்பைக் கற்றுக்கொடுத்தார். அவர் எனக்கு முதன்முதலில் கற்றுக்கொடுத்தது என்ன வேஷம் தெரியுமா? 'இராமாயண'நாடகத்தில் 'சீதா'வேஷம். யாரென இந்தப் புருஷனை'அறிகி லேன் என்கின்றபாட்டு. அதை நான் பாடி,அதற்குத் தகுந்தாற்போல் நடனமாடி, பேசி, சிரித்து நடிக்க வேண்டும். ஏனென்றால் இராமரைப் பார்க்கிற காட்சி அது? அந்தப் பெண் (சீதை) நான் தான். நாட கத்தில் சேர்ந்த முதல் நாளே அந்த வேஷத்தை நான் மிகவும் சிறப்பாகச் செய்தேன். வேஷம் கலைத்து உள்ளே வந்தவுடன் என் வாத்தியார் எனது முதுகின் மேல் தட்டிக்கொடுத்து, 'மிகவும் நன்றாக நடித்தாய்'என்றார்.


முதறிஞர் ராஜாஜியுடன்...

கலையில் நன்றாக வரவேண்டும் என்ற வெறிபிடித்தவன்.கலையைவைத்தே வாழ்க்கையில் முன்னேற வேண்டும். நமது அப்பா, அம்மாவிற்கெல்லாம் சோறுபோட வேண்டும்' என்று நினைத்தவன்,முதன் முதலில் ஒரு வேஷம் போட்டு, அது நன்றாக இருக்கிறது என்று கூறியவுடன் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பேன். சிந்தித்துப் பாருங்கள். அதன் பின்,படிப்படியாக வேஷங்கள் உயர்ந்தன. உண்மையிலேயே சொல்கிறேன். என்னுடைய நாடக வளர்ச்சி மாதிரி யாருக்குமே இருந்திருக்காது.

பொதுவாக, நாடகத்தில் பெண்வேஷம் போட்டவனுக்கு பெண்வேஷம் மட்டும் தான் போடத் தெரியும். அதனால், நிஜவாழ்க்கையிலும் அவர் உட்காரும் விதம், பேசும்விதம், நடக்கின்ற விதம், எல்லாவற்றிலும் ஒரு பெண்மை கலந்து விடும். ஆனால் எனக்கு அப்படியில்லை. ஏனென்றால் ஒரு நாடகத்தில் நான் பல வேஷங்கள் போட்டவன். இராமாயணத்தில் நான்கு வேஷம் போட்டிருக்கிறேன்.இதெல்லாம் அடுத்தடுத்துக் கிடைத்த ப்ரமோஷன். முதலில் சீதை வேஷம் போட்டேன் அது நன்றாக இருக்கிறது என்று தெரிந்தவுடன், பரதன் வேஷம் போட்டேன். அதுவும் நன்றாக அமைந்து, மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.பின்னால் நான் சினிமா நடிகனான பின், சம்பூர்ண ராமாயணம் என்ற திரைப்படத்தில் ப்ரதன் வேஷம் போட்டேன். மாமேதை ராஜாஜி அவர்கள் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுத 'நான் பரதனைக் கண்டேன்' என்றார். இதை விட ஒரு நடிகனுக்கு வேறு என்ன பெருமை வேண்டும்? எவ்வ ளவு பெரியவர்களுடைய வாழ்த்துக்களெல்லாம் எனக்குக் கிடைத்துள்ளது. இந்த வாழ்த்துக்க ளுக்கு உறுதுணை யாக இருந்தது, என்னை சிறு வயதில் நடிகனாக உருவாக்கிய என் வாத்தியார் 'சின்ன பொன்னுசாமி படையாச்சி' அவர்கள் ஆசிதான்.


சிறுவனாக இருக்கும்போது 'கிருஷ்ண லீலா' நாடகத்தில் பெண் வேடத்தில்... நிற்பவர்களில், இடமிருந்து ஆறாவது வி.சி.கணேசன்

மேலும், இராமாயண நாடகத்தில் நான் சூர்ப்பனகை வேஷம் போட்டேன். சூர்பனகை என்றவுடன் கோரமான உருவம்கொண்ட சூர்ப்பனகைஎன்று நினைத்துவிடாதீர்கள். அந்த சூர்ப்பனகை அழகான பெண் உருவம் கொண்டுதான், ராமனையும், லக்ஷ்மனையும் மயக்கவேண்டும் என்று நினைக்கிறாள். அந்த வேஷம்தான் நான் போட்டேன். அது 'யௌவன சூர்ப்பனகை' வேஷம்.

அப்போதெல்லாம் எனக்கு முடி முழங்கால் வரை இருக்கும். அஜந்தா ஓவியங்களில் ஒரு கச்சை கட்டிக்கொண்டு, ஒரு பெண் தோற்றமளிப்பாள். நானும் அது போல் நின்று கொண்டு, உடம்பு முழுவதும் எனது நீண்ட தலைமுடியால் மறைத்துக்கொண்டு மேடையில் சிலைபோல் தோன்றுவேன். இப்பொழுது தேங்காய் எண்ணெய், ஷாம்பூ விளம்பரம் போடுகிறார்களே, அது மாதிரித்தான் தோன்று வேன். லைட் போட்டவுடன், அப்படியே தலைமுடியைச் சுழற்றி விலக்குவேன். என் அழகான தோற்றம் வெளிப்படும். எல் லோரும் பத்து நிமிடம் கை தட்டுவார்கள்.

'சிம்மக்குரலா?'


'கர்ணன்'படத்தில்...(1964)
'தங்கப்பதக்கம் 'படத்தில்...(1974
'ரோஜாவின் ராஜா' படத்தில்...(1974)
'கல்தூண்'படத்தில்...(1981)

டி.எஸ்.என்: இராமாயண நாடகத்தில் அதற்கடுத்தபடி என்ன வேஷம் போட்டிருக்கிறீர்கள்?

சிவாஜி:இராவணனுடைய மகன் இந்திரஜித் வேஷம் போடுவேன் .ஒரே நாடகத்தில் முதலில் சீதை இரண்டாவது பரதன், மூன்றாவது சூர்ப்பனகை, நான்காவது இந்திரஜித், இரண்டு பெண் வேஷம், இரண்டு ஆண் வேஷம் அதனால்தான் பெண் வேஷம் போடுவதால் ஏற்படும் பெண் தன்மை மட்டுமே என்னிடம் காணப்படாமல் போனது.

ஒவ்வொரு நாடகத்திலும் இரண்டு மூன்று வேஷம் போடுமளவிற்கு எனக்குப் புகழ் தேடிக் கொடுத்தவர் எனது நாடக வாத்தியார். ஆகையால் அடுத்தடுத்து வளர்ந்து நாடகக் கம்பெனியில் ஒரு சிறந்த நடிகன் என்ற பெயரை வாங்கினேன்.

(தொடரும்)

# வாகனத் தரிப்பிட வசதியற்ற நிலையில் திருநெல்வேலி மரக்கறிச் சந்தை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையின் எதிர்ப்புறத்தில் வாழைக் குலை வியாபாரம், வெற்றிலைக் கடைகள், வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த காணியில் கட்டடத் தொகுதியின் கட்டட வேலைகள் ஆரம்பமாகிப் பலமாத காலமாகி விட்டபோதிலும் அந்த வேலைகள் முடிவடையாமல் மந்தகதியில் நகர்ந்து கொண்டிருப்பதால் சந்தைக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் வரும் வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை நிறுத்தி வைக்க வசதியில்லாமல் இருப்பதால் பல அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டியிருக்கிறது.

அரைகுறை கட்டட வேலைகளுடன் கட்டுமானப் பொருட்கள் சிதறுண்ட நிலையில் காணப்படும் அக்காணியில் வாழைக்குலை வியாபாரிகளது வாழைக்குலைகளும் வாகனங்களும் பெரும் பகுதியைப் பிடித்துக்கொள்ள, வாடிக்கையாளர் தமது வாகனங்களை நிறுத்துவதற்கு இடம் தேடி அலைவது ஒவ்வொரு நாளும் நடைபெறும் வாடிக்கையான நிகழ்ச்சியாகிவிட்டது.

கட்டடத் தொகுதியின் வேலைகள் எப்பொழுது முடியும் என்பது நிச்சயமில்லாத நிலையில் வாடிக்கையாளர்களது வாகனங்களை நிறுத்துவதற்கு உரிய வசதிகளை, அச்சந்தையின் பராமரிப்புக்குப் பொறுப்பானவர்கள் மேற்கொள்ளாததையிட்டு மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள். (து)

# கைதான இரு தமிழர்களுக்கும் ஜனவரி 12 வரை விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி கருத்தாப்பாலம் சோதனைச் சாவடியில் வெடி மருந்துகளுடன் கைதுசெய்யப்பட்ட இரு தமிழர்களை எதிர் வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கரடியனாறு பிரதேசத்தைச் சேர்ந்த 28வயதுடைய எஸ்.சிவகுமார் மற்றும் 36வயதுடைய என்.சாந்தலிங்கம் ஆகிய சந்தேக நபர் இருவரும் மட்டக்களப்பு பதில் நீதிபதி கே. தங்கவடிவேல் முன்னிலையில் ஏறாவூர் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து இவர்களை விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அத்துடன் இவர்களுடன் கைது செய்பட்ட இருசாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இருவரும் தலா 2 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்டாத பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி பயணம்செய்த இந்த இளைஞர்கள் வெடிபொருட்களை தம்வசம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் இவர்கள் கருங்கற்கள் உடைக்கும் கூலித் தொழிலாளர்களேனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-9)

# புலனாய்வு அதிகாரியைக் கொலை செய்ய புலிகளிடம் பணம் பெற்றதாக குற்றச்சாட்டு

(நுவரெலியா)

நுவரெலியா பொலிஸ் பிரிவினர் நேற்றுமுன்தினம் மூன்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளார்கள். கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் சார்ஜண்ட் தரத்திலான புலனாய்வு அதிகாரியின் கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற வகையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வாகனமொன்றைக் கடத்தி சாரதியை கொலை செய்த குற்றச்சாட்டுடனும் தொடர்புடைய இவர்கள் இராணுவப் புலனாய்வு அதிகாரியின் கொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து 7இலட்சம் ரூபாவை ஒப்பந்தப் பணமாக பெற்றதாகவும்,குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளை கொலை செய்வதற்கான திட்டங்களையும் கொண்டிருந்த இவர்களிடமிருந்து மைக்ரோ ரக கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-9)

# மங்கள சமரவீர இன்று அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று செவ்வாய்க்கிழமை அமெரிக்காவிற்கு பயணம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அமெரிக்க உள்துறை அமைச்சர் கொண்டலிசா ரைசின் அழைப்பை ஏற்றே ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவிற்கு பயணம் செய்யவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அமைச்சர் மங்கள சமரவீரவுடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பலிங்கார மற்றும் இலங்கை சமாதான செயலக பணிப்பாளர் ஜே.ஆர் குணரட்ண ஆகியோரும் இணைந்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள சமாதான முயற்சிகள் குறித்து முழுமையாக அமெரிக்க அரசாங்கத்திற்கு அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமளிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய அளவில் இந்திய ஆதிக்கம் இலங்கையில் தலைதூக்கியுள்ள இந்நிலையிலும், மஹிந்தவின் இந்தியப் பயணத்தின் பின்னான காலத்திலும் அமெரிக்கா இந்த அழைப்பினை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

# அமைதி முயற்சிகளுக்கான கதவை மஹிந்த ராஜபக்ஷ மூடிவிட்டார்

## -சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

ஒற்றையாட்சியின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று இந்தியாவில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ் கூறியிருப்பதன் மூலம் அமைதி முயற்சிகளுக்கான கதவுகளை அவர் மூடிவிட்டார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். இது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறுகையில்,

மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய அறிக்கை கடும் கண்டனத்துக்குரியது. தென்னிலங்கை அரசியல்வாதிகளை மகிழ்ச்சிப்படுத்தத்தான் அந்த அறிக்கை உதவுமே தவிர அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கல்ல.

அமைதி முயற்சிகளுக்கான கதவுகளை மஹிந்த ராஜபக்ஷ மூடி விட்டதாக நாம் அச்சப்படுகின்றோம். ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் மஹிந்த ராஜபகஷ் இந்தியாவை இந்த முயற்சியில் ஈடுபட வைப்பதாகத் தொடர்ந்து கூறி வருவது ஆச்சரியமளிக்கின்றது என்றார். (த)

# கவலையளிக்கும் இலங்கை நிகழ்வுகளும் சமாதான முன்னெடுப்பின் அவசியமும்

ஆரம்பத்தில் அமைதிப் பேச்சு வார்த்தைகள் தந்த ஓரளவான நிம் மதி அண்மைக்காலமாக இலங்கை யில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களால் அற்றுப் போய்விட் டது. கிழக்கில் ஸ்ரீலங்கா உளவுத் துறையினரின் பிரித்தாளும் தந்திரத் தால் தமிழர்களுக்கிடையில் மோதல் கள் நடைபெறும் இவ் வேளையில் வடகில் குறிப்பாக யாழ்மாவட்டத் தல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அப் பாவித் தமிழ் மக்கள் மேல் தமது அடக்குமுறைகளை மீண்டும் கட்ட விழ்த்துவிட்டுள்ளார்கள்.

புங்குடுதீவில் சாரதாம்பாள் வரி சையில் இருபது வயது தமிழ்ப் பெண்ணான தர்சினி இளையதம்பி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டு பயங்கரமான சித்திரவதை களுக்குள்ளாக்கப்பட்டபின் படு கொலைசெய்யப்பட்டு பாழடைந்த கிணறு ஒன்றில் வீசப்பட்டுள்ளார். இதற்குக் காரணமாக அங்கு நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா கடற் படையினரையே அனைவரும் குற் றம் சாட்டுகின்றனர். அந்த அப்பாவி தமிழ்ப் பெண்ணின் இறுதிக் கிரி கைகளின்கூட ஒழுங்காக அமைதியாக நடைபெறமுடியாதவாறு அங்குள்ள படையினர் அப்பாவி பொது மக்கள் மேல் தாக்குதல்களை நடத்தியுள்ள தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்தும் இலங்கையில் அவ்வப்போது தமிழ்ப் பெண்கள் இவ்விதம் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டு படுகொலை செய் யப்படுவது தொடர்வது தடுத்து நிறுத் தப்படவேண்டும். இவ்விதம் பாதிக் கப்பட்டு உயிர்தப்பிய பெண்கள் நீதிகேட்டுப் போராடும் போது கூட அவர்களது உயிர்களுக்கு ஆபத் துள்ளது என்பதைத்தான் அண் மைக்கால சம்பவங்கள் தெரிவிக் கின்றன. மன்னார் உப்புக் குளத தில் 2001ஆம் ஆண்டில் கர்ப்பிணி பெண்ணான விஜகலா பொலிஸா ராலும் கடற்படை அதிகாரிகளா லும் பாலியல் பலாத்காரத்திற்குள் ளாக்கப்பட்ட வழக்கு விசாரணை சென்ற செப்டெம்பர் 21அனுராத புரத்தில் நடைபெறுவதற்கு முன் பாக அவர் கடத்தப்பட்டு காணா மல் போயுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே உல கெங்கும் வாழும் பெண்கள் தத்த மது சமூகங்களை பலவேறு வகை களில் பாலியல் வல்லுறவுக்குள் ளாக்கப்பட்டு வரும் பெண்கள் நிலை யில் பாலியல் சுதந்திரத்திற்காக போராடும் பெண்கள் அமைப்புகள் தமது கவனத்தை இத்தகைய சம் பவங்களின் நோக்கி திருப்ப வேண் டும். அவ்வப்போது ஒரு சில வரி கள் எழுவதோடு நிற்காமல் இத் தகைய அமைப்புகள் பலவேறு வகைகளில் தமது எதிர்ப்பினை காட்டும் வகையிலான நடவடிக் கைகளை உளரூர் சர்வதேச ரீதியில் முன்னெடுப்பின் இத்தகைய சம்ப வங்கள் மேலும் அதிகமாக நடை பெறுவதைத் தடுக்க உதவும்.

இதேசமயம் ஸ்ரீலங்காப் படை யினர் யாழ்பல்கலைக்கழக மாண வர்கள், பேராசிரியர்கள், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீதும் தமது அடக்குமுறையினை அண்மைக் காலமாக கட்டவிழ்த்துவிட்டுள்ள னர். மாணவர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் உபவேந்தர் என பலர் தாக்கப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

படையினரின் தேடுதல் நடவ டிக்கைகளும் அதிகரித்துள்ளன. கொழும்பிலும் தமிழர்களின் அன் றாட வாழ்க்கை இத்தகைய தேடு தல்கள், கைதுகளினால் பாதிக்கப் பட்டுள்ளது. மேற்படி நிலைமை யினையிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணைக் கமிஷன் அமைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் சட்டரீதியாக மேற்படி ஸ்ரீலங்காப் படைகளின் 'கமாண்டா'ரான ஸ்ரீலங்கா ஜனாதிபதி அவரின் செயல்க ளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை யெனக் காட்டவிழைகின்றாரா? அல் லது அவரது கட்டுப்பாட்டில் படை யினர் இல்லையா? இதனைத்தான் தொட்டிலையும் ஆட்டி விட்டுப் பிள ளையையும் கிள்ளுவதையே கூறு வது நிறைவேறு அதிகாரங் கொண்ட ஜனாதிபதி அவர். அவர் நினைத் தால் நிலைமையினை மாற்றுவ தொன்றும் சிரமமானதல்ல.

தற்போதைய நிலைமையில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ரணில் அரசு காலத்தில் முன்னெடுக்கப்பட்ட யுத்தநிறுத்தமும், அமைதிக்கான பேச்சுவார்த்தைகளும் தீவிரமான ஆத்மசுத்தியுடன் தொடரப்படுவதே நல்லதெனத் தெரிகின்றது. இத்த கையதொரு சூழலில் விடுதலைப் புலிகளுடன் மாற்றுக கருத்துள்ள வர்கூடத் தமது முரண்பாடுகளை நட்புரீதியிலான நிலையில் தீர்ப்ப தற்கு முயலவேண்டும். அதற்கு மாறாக நீண்டகால அரசியல் வர லாற்றுப் பின்னணி கொண்ட இலங் கையின் தேசிய இனப்பிரச்சினை யின் தன்மையினை விளங்காமல், இலங்கை அரசின், படையினரின் அண்மைகால நடவடிக்கைகளுக் கெல்லாம் காரணமாக தனிப்பட்ட அரசியல் விரோதாதியில் விளைந்த வளக்கங்களை முன்வைத்து இலங்கை அரசபடைகளின் ஆக்கிரமிப்பினை யும் அடக்குமுறையினையும் நியா யப்படுத்துவது தமிழ் மக்களின் நீண்டகால நியாயமிக்க போராட் டத்தினை கொச்சைப்படுத்துவதாக அமைந்துவிடும. அபாயத்தினை. அனைவரும் புரிந்துகொள்ள வேண் டும். மிகவும் பலமான நிலையில் உள்ள விடுதலைப்புலியினர் தமக் கென்று பலமான தளப்பிரதேசம் ஒன்றினை வைத்துள்ள விடுதலைப் புலியினர் தமிழ் மக்களை பெரும் பான்மையினரின் ஆதரவைப் பெற் றுள்ள விடுதலைப் புலியினர் தமக் கென்று அதிகாரம் ஏதுமற்ற தீர் வொன்றினை ஏற்றுக் கொள்வார் கள் என நினைப்பது நடைமுறைச் சாத்தியமற்ற, யாதார்ததமற்ற நினைப்பாகும். இரு பகுதியினரும் தத்தமது பலம், பலவீனங்களை நன்கு புரிந்துகொண்டு நியாய மானதொரு தீர்வு நாடிப் பேசினா லொலிய பயன் ஏதும் விளையப் போவதில்லை. முதலில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையில் நடைபெறும் பேச்சு வாாத்தைகள் நல்லதொரு தீர்வினை அடைவதற்குரிய வழிகள் இருக் கும் பட்சத்தில் அவற்றைக் குழப் பாமல் இருப்பது நல்லது. அதேசம யம் மனித உரிமைகள் விடயத் தில் அரசியல் அமைப்புகள் அரசு களை நோக்கி குரல் கொடுப்பதை நிறுத்தத் தேவையில்லை. ஆனால அவ்வி தம் குரல் கொடுக்கும் போது இலங்கை இனங்களுக்கிடையி லான தேசிய ரீதியிலான பிரசசினை யின் ஆழததை உள்வாங்கி அதன் மீதான கவனத்தை திசை திருப்பா மல் நீதியானதொரு போராட்டத் தின் நோக்கத்தினை சீர்குலைக் காமல் பார்த்துக் கொள்வதும் அவ சியம். கடந்த காலங்களில் இலங் கையின் அரச படைகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது குண்டுகள் வீசி சுட்டு, வெட்டித் தாக்குதல்கள் பல நடத்தியுள்ளன. குழந்தைகள், முதி யவர்கள், பெண்கள் எனப் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1948இல் இருந்து எத்தனை முறை பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக் கள் அவாகள் தமிழர்கள என்ற காரணத்தால் இனத்துவேச அரசி யல வாதிகளின் ஆதரவுடன் செயற பட்ட சிங்கள சமூக விரோதச் சக்தி களினால் உடமைகளை உயிர களை இழந்துள்ளார்கள். தமது தாயகப் பிரதேசத்திலேயே ஏதிலிகளாக ஆக் கப்பட்டார்கள். பெண்கள் மானப் பங்கம் படுத்தப்பட்டார்கள். எத்த னையோ தமிழ் இளைஞர்கள் சிறை களில் இன்னும் வாடிக கொன்றிருக் கின்றார்கள். சிறைகளில கொன் றொலிக்கப்பட்டு இருக்கின்றார் கள். இன்பம், செல்வம் என எத்தனை தமிழர்கள் சித்திரவதை செய்யப் பட்டு கொன்றொழிக்கப்பட்டு இருக் கிறார்கள். செம்மணி போன்ற புதை குழிகளுக்குள் காணாமல் போயி ருககின்றார்கள். பதவியா, வெலிஓயா, திகாமடுல்ல என எததனை தமிழ்ப் பிரதேசங்கள் சிங்கள மயப்படுத் தப்பட்டன? தமிழர்கள் என்ற காரணத தினால் மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக் கப்பட்டார்கள். 1983இனக் கலவரத்தில் நடந்த நிகழ் வுகளை உலகே அறியும் இவற்றை யெல்லாம் மறந்துவிட முடியுமா? இவற்றிற்கெல்லாம் இதுவரையில் தீர்வு ஏதாவது கிடைத்ததா.

இதுவரையில் செய்யப்பட்ட ஒப் பந்தங்களில் ஒன்றையாவது முறை யாக நடைமுறைப்படுத்தி இருக கின்றார்களா? அன்று செல்வா-பண்டா ஒப்பந்தம் ஏற்பட்ட கையோடு ஜே.ஆர்.ஜெயவர்த்தன கண்டிக்கு பாதையாத்திரை சென்றார். அதன் பின் ஒப்பந்தத்தின் கதி அதோகதி! ஏன் 1987இல் பிராந்திய வல்லரசான இந்தியா தனது வலிமையினைக் காட்டி ஜே.ஆர்.அரசினை அடிபணிய வைத்து இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்ததே அதனைக்கூட முறையாக நடைமுறைப்படுத்த முடிந்ததா? அவ்வளவு தூரத்திற்கு தெற்கில் இனவாதம் ஊறி இருக்கிறது. தமி ழர்களுக்கு சிறு உரிமையாவது கிடைத்துவிட்டால் தம் இறைமைக் குப் பாதிப்பென பெரும்பான்மை இனத்தின் மதகுருக்களும், அரசியல வாதிகளும்,கொள்கை வகுப்பாளர் களும் நினைப்பதால் தான் இந்த நிலை. இதற்கெல்லாம் காரணம் இலங்கையின் வரலாற்றில் புதை யுண்டுள்ளது. வரலாறு கண்டு அஞ் சாமல் அனைவரும் வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டால் துட்டகைமுனு வடக்கில உள்ள தமிழர்களையும் தெற்கி லுள்ள கடலையும் நினைத்து அஞ்சி முடங்கிக்கிடக்க வேண்டிய கதையை இனியும் படிக்கவேண் டிய தேவை இருக்காது. ஒரு காலத தில் இலங்கை முழுவதையும் ஆண்ட ராஜராஜ சோழனைப் பற்றி யும் ராஜேந்திர சோழனைப்பற்றி யும் இனியும் நினைதது அஞ்சி உணர்வு ரீதியன் கொள்கை வகுக் கும் மனப்போக்கு தெற்கில் மாற வேண்டும். இனவாத அரசியலை அனைவரும் திறக்க வேண்டும்.


**இணையப் பார்வை**

அதுவரையில் தேசிய இனப்பிரச்சி னைக்கு அமைதியான தீர்வு என் பது சாத்தியமற்றதொன்று தேசிய இனப் பிரச்சினையின தீர்வு மட்டும் தமிழ் மக்களின் சகல சமூக அரசி யல் பிரச்சினைகளையும் தீர்த்து விடப் போவதில்லை. ஆனால் அத் தகைய பிரச்சினைகள் அனைத்திற்கு மான தீர்வுகளுக்கும் ஆரம்பப்படிக கல்லாக இருக்கப் போவது இந்தத தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுதான்.

## பக்தாத்தில்
# 8 இடங்களில் குண்டுவெடிப்பு

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று முன்தினம் காலை எட்டு



இடங்களில் குண்டுவெடிப்பு சம்ப வங்கள் நிகழ்ந்தன. இதில் ஒருவர் காயமடைந்தார்.

ஈராக்கில் கடந்த மாதம் 15ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல நடைபெற்றது. தேர்தலுக்குப் பிறகு தீவிரவாதிகளின் குண்டு வெடிப்பு தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

பக்தாத்தில் நேற்று முன்தினம் காலை வெவ்வேறு இடங்களில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. ஈராக் பொலிஸார் இது பற்றிக் கூறுகையில், பக்தாத் நக ரில் உணவு விடுதிகளுக்கு அரு கில் இரண்டு குண்டுவெடிப்புகளும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலி ஸார் குறிவைத்து இரண்டு குண்டு வெடிப் புகளும் நடத்தப்பட் டுள்ளன. இதுதவிர இரண்டு காாக குண்டு வெடிப்புகள் நடந்தன. மொத்தம் எட்டு இடங் களில் குண்டுகள் வெடித்தன. குண்டு வெடிப்பு சம்ப வத் தில் ஒருவர் காயமடைந்தார் என் றனர்.



தேர்தலுக்கு பிறகு தீவிரவாதி களின் தாக்குதல் அதிகரித்துள் ளது என ஈராக் மக்கள் கருதுகின் றனர். அமெரிக்க பாதுகாப்பு படை யினர் இதுபற்றிக் கூறுகையில்,

ஈராக் மற்றும் அமெரிக்க படை களின் கூட்டு முயற்சியால் கொரில்லா தாக்குதலில் ஈடுபட் டுள்ள தீவிரவாதிகளின் நடவடிக் கைகள் குறைந்துள்ளன. குண்டு வெடிப்பு சம்பவங்கள் அவ்வப் போது நடைபெற்றாலும் காயம டைபவர்களின் எண்ணிக்கை கணி சமாக குறைந்துள்ளது என்றனர்.(த)

உலக தரிசனம்

# தீவிரவாதிகளின் நிபந்தனையை ஏற்றது சூடான்

ஈராக்கில் செயல்பட்டு வரும் சூடான் தூதரகத்தை மூடுவதாக அந்நாடு அறிவித்ததையடுத்து அல்-குவைதா தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்ட சூடான் தூதரக ஊழியர்கள் ஐந்து பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சூடான் நாட்டின் தூதரகம் உள் ளது. இங்கு பணிபுரிந்த சூடான் நாட்டைச் சேர்ந்த ஐந்து ஊழியர் களை சில நாட்களுக்கு முன் அல்-குவைதா தீவிரவாதிகள் கடத்தச் சென்றனர். ஈராக்குடனான அனைத்து தொடர்புகளையும் 48 மணி நேரத் தில் சூடான் துண்டிக்க வேண்டும் என்றும், பக்தாத்தில் செயல்பட்டு வரும் சூடான் தூதரகத்தை உடன டியாக மூடவேண்டும் என்றும் தீவி ரவாதிகள் அறிவித்தனர். தங்கள் கோரிக்கையை நிராகரித்தல் கடத்திச் சென்றவர்களை கொன்று விடப் போவதாகவும் கூறினர். கடந்த 30ஆம் திகதி பக்தாத்தில் உள்ள தனது தூதரகத்தை மூடுவ தாக சூடான் அரசு அறிவித்தது.

இதையடுத்து கடத்திச் செல் லப்பட்ட தூதரக ஊழியர்கள் ஐநது பேரையும் அல்-குவைதா தீவிரவாதி கள் விடுதலை செய்தனா. அமெ ரிக்காவின் ஆதரவோடு செயல்பட்டு வரும் ஈராக் அரசுக்கு முஸ்லிம் நாடுகள் அங்கீகாரம் அளிப்பதை நிறுத்தவேண்டும் என்று அல்-குவைதா தீவிரவாதிகள் ஏற்கனவே மிரட்டல் விடுத்துள்ளனர்.

தங்கள கோரிக்கையை ஏற் காத நாடுகளை, சேர்ந்தவர்களை கடத்திச்சென்று கொலைசெய்து வருகின்றனர். கடந்த 2004ஆம் ஆண டில் எகிப்து தூதரக அதிகாரி இரண்டு அல்ஜீரிய தூதரக பிரதி நிதிகள் மற்றும் மொராக்கோ நாட்டு தூதரக ஊழியர்கள் ஆகியோரை கடத்திச் சென்று கொலைசெய் துள்ளனர்.

பெரும்பாலும் அல்-குவைதா தீவிரவாதிகள் தாங்கள் கடத்திச் சென்றவர்களை விடுவிப்பது இலலை. இதற்கு முன்னதாக பிலப் பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த லாரி டிரைவர் அங்கேலா என்பவரை மட் டுமே விடுதலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.. (த)

புத்தாண்டை முன்னிட்டு பெசன்ட் அன்னை வேளாங்கன்னி தேவாலயத்தில் நள்ளிரவில் சிறப்புப் பிரார்த்தனை நடந்தது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.



நீங்கள் சொல்லித்தரும் படிப்பு ஒரு குழந்தையை மகாத்மாவாக்கவேண்டும் என்பதில்லை மனிதனாக ஆக்கினாலே போதும்.

-கெதே

வலம்புரி

## மதிப்பீட்டில் குளறுபடி மாணவர்களைப் பாதிக்கும்

க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பாடங்களின் பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளியிடலில் குளறுபடி ஏற்பட்டுள்ளதால் மாணவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இசற் புள்ளியிடல் வெளியாகிய பின்னர் விஞ்ஞானப் பாடங்களின் பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளியிடலில் தவறு நிகழ்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கல்வி என்பது அர்ப்பணிப்போடுகூடிய மாணவர்களின் செயற்பாடு. எந்த மாணவர் தம்மை அர்ப்பணித்து கல்வியில் கருத்தாக இருக்கின்றாரோ அந்த மாணவர்களே பரீட்சையில் சித்தியடைகின்றனர்.

இவ்வாறு துணிந்து கூறுவதற்கு முன்பாக பரீட்சை நேர்மையாக நடைபெறவேண்டும் என்பதும், பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் கணினி மயப்படுத்தல் ஆகிய கருமங்களில் ஈடுபடுபவர்கள் நீதியுடனும், உண்மையாகவும் செயலாற்றவேண்டும் என்பதும் கட்டாயமானதாகும்.

பரீட்சையோ அன்றி பரீட்சை மதிப்பீடுகளோ முறைகேடாக நடைபெறுமாயின் அதனால் உண்மையான கல்வியாளர்களை இந்த மண் இழந்துவிடும்..

எனவே பரீட்சை என்ற விடயத்தில் ஒரு நாடு முழுமையான நேர்மையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். உலகில் எந்த நாட்டில் பரீட்சை மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் முறைகேடுகள் நடக்கின்றனவோ அந்த நாட்டின் எதிர்காலம் என்பது அழிவுப் பாதையை நோக்கியதாகவே இருக்கும்.

கடந்த காலங்களில் நாட்டில் நடந்த சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகள் அதி உச்சமான நேர்மையுடன் நடைபெற்றதாகவே கூறவேண்டும். சிலவேளைகளில் ஒழுங்கீனங்கள் நடந்தபோது மீள்பரீட்சைகளும், மீள் மதிப்பீட்டுப் பணிகளும் இடம்பெற்றன.

இவை பரீட்சை நேர்மையாக நடைபெற வேண்டும் என்பதற்கான உறுதிப்பாட்டின் வெளிப்பாடாகவே கருதப்பட்டன.

இந்நிலையில் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பாடங்களுக்கான பரீட்சையில் பல்தேர்வு வினாக்களுக்கான மதிப்பீட்டில் குழப்பம் ஏற்பட்டுள்ள செய்தி பரீட்சை மீதான நம்பிக்கையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

பரீட்சை மதிப்பீட்டில் - கணினி ஒழுங்கமைப்பில் செல்வாக்குக் கலாசாரம் நுழைந்து கொண்டதா என்ற வினாவின் மத்தியில் உரிய விசாரணைகள் நடத்தப்படுவதும், அவ்விதம் மோசடிகள் இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதும் அரசின் தலையாய கடமையாகும்.

இதனைவிடுத்து மோசடிகளும், செல்வாக்கின் பெயரால் மூடிமறைக்கப்படுமாயின் பரீட்சைகள் மீதான நம்பிக்கைகளும் கற்றல் செயற்பாடுகளும் பின்னடைவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

## தயா சந்தகிரியின் பிரி.ஆயுதக் கொள்வனவு வசந்த கரன்னகொடவால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

முப்படைத் தளபதியும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரியால் ஒப்புதல் தெரி விக்கப்பட்ட பிரித்தானியா ஆயுதக் கொள்வனவை கடற்படை தளபதி வசந்த கரன்னகொட இடைநிறுத்தம் செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஸ்ரீலங்காகடற்படையின் தாக்குதல் படகுகளுக்கென பிரித்தானிய கடற்படை பயன்படுத்திய 20வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த 15தாக்குதல் ஆயுதங்களுக்கான 120கோடி ரூபா கொள்வனவுக்கு முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி 2003ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தார். இதற்கான 23கோடி ரூபா முன்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

பிரித்தானியக் கடற்படையின் தாக்குதல் படகுகளிலிருந்து அகறறப்பட்ட இந்தப் பழைய ஆயுதங்களை ஸ்ரீலங்காவுக்கு அனுப்பத்தயாராக இருந்தபோது புதிய கடற்படை தளபதியினால் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டது.

இதனையடுத்து இந்தக் கொள்வனவை அவர் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நிலையில் நவீன தாக்குதல் கருவிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக கடற்படை தளபதி வசந்த கரன்ன கொட தெரிவித்துள்ளார். முன்னைய ஆயுதங்களுககாக 23கோடி ரூபா முன் பணமாகச செலுத்தப்பட்டுள்ள போதிலும் அவற்றைப் படகுகளிலிருந்து அகற்றுவதற்குத தாமதமாகியதால் முன்னாள் கடற்படைத் தளபதியின் காலத்தில் இவை கடற்படைககுக் கிடைக்கவில்லை.

தற்போது இந்த ஆயுதங்கள் படகுகளிலிருந்து அகற்றப்பட்டு வருவதாகவும், அவை ஸ்ரீலங்காவுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நிலையில், இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு கடற் படைத் தளபதி நடவடிக்கை எடுத்திருப்பதாக கடற்படை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## தலதாமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தினருடன் சென்றார்.

அவரை தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல பண்டார வரவேற்றார்.

கண்டி தலதா மாளிகையில் மதவழிபாடுகளை மஹிந்த ராஜபக்ஷ நடத்தினார். பின்னர் பொது நிகழ்ச்சி ஒன்றிலும் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷவினது தலதா மாளிகை பயணத்தின் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் புகைப்படக் கலைஞர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.இதனால் ஊடகவியலாளர்களுக்கும மஹிந்த ராஜபக்ஷ அலுவலக அதிகாரிகளுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. தலதா மாளிகை சார்பில் ஊடகவியலாளர் களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் அனுமதிக்காதது ஏன் என்றும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினா (த)

## தமிழரை துன்புறுத்தும் கைது நடவடிக்கைகள்

### இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் நேற்று கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்ற கர்ரணத்திற்காக சந்தேகத்தின் அடிப்படை யில் கைது செய்துள்ளதாக குற்றம் சுமத்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன், இது சட்டத்திற்கு முரணானது என்பதுடன் இனவாத நோக்கமுடையதும் எனவும் தெரிவித்துள்ளார். இது ஒரு மனித உரிமைகள் மீறும் செயல் எனவும், இந்த கைதுகளினால் அவர்களின் மனித கௌரவம், அடிப்படை உரிமைகள் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுகோள்


(கொழும்பு)

இலங்கை அமைதிப் பேச்சுக்களை நோர்வே அனுசரணையாளர்கள் தொடங்க வேண்டும் என்று சிறிலங்காவின் தேசிய போருக்கு எதிரான முன்னணி வேண்டுகோள் விடுத் துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டு வர இரு தரப்பு இராணுவத்தினரும் கண்காணிப்புக் குழுவுக்கு உதவ வேண்டும். வடக்கு - கிழக்கில் புனரமைப்புப் பணிகளை அர சாங்கம் உடனே தொடங்க வேண்டும். அனைதது யுத்த நிறுத்த மீறல்களுக்கு எதிராக போராடுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

அமைதிப் பேச்சுக்களை வெளிப்படையாக நடத்த வேண்டும். வடக்கு - கிழக்கில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக துணை இராணுவத்தினரது தாக்குதலும் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே யுத்தத்தை உருவாக்கி விடும என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

பருத்தித்துறை வீதியும் வைத்தியசாலை வீதியும் இணையும் வேம்படிச்சந்தியில் வைத்தியசாலை நோக்கி பொருட்களுடன் திரும்பிய பாரஊர்தி ஒன்று, நீண்ட காலமாக ரெலிக்கொம் நிறுவனத்தினால் வெட்டப்பட்டிருந்த பாரிய பள்ளம் ஒன்றில் புதைந்து காணப்படுகின்றது.



படம்: பாலமுருகன்

## தொழிலாளர் பிரச்சினையை தீர்க்க புதிய இணக்கப்பாட்டுத் திட்டம்

பல்வேறு தினங்களில் தொழில் தருநர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு புதிய இணக்கப்பாட்டுத் திட்டமொன்றை தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.

குறிப்பிட்ட இரண்டு தரப்பினருக்குமிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இந்த இணக்கப்பாட்டுச் சபை தொடர்பான சட்டமூலமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுடன செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தொழில் தருநர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையில ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு இந்தக் குழுவிற்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.இது தொடர்பாக பிரதம நீதியரசர்களிடம் ஆலோ சனை நடத்தப்பட்டு இந்தப்புதிய திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டவிதிகளைத்தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்தவுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

## மன்னிப்பு வழங்குமாறு திஸாநாயக்க மனு

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தனக்கு மன்னிப்பு வழங்கப்படவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவரது தாயார் மனைவி ஆகியோர் கையொப்பமிட்ட மனுவொன்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இவரது வேண்டுகோள் எதிர் வரும் 17ஆம் திகதி சட்டமன்ற சபை கூடும் போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.(ற-8)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நமது ஆன்மாவின் பெருமையில் நம்பிக்கை இன்மையே நாத்திகம் என்று வேதாந்தம் கூறுகிறது. சந்தேகமின்றிப் பலருக்கு இது பயங்கரக் கருதது தான் இது அடைய முடியாத குறிக்கோள் என்று நம்மில் பலரும் நினைக்கலாம். ஆனால். இதை ஒவவொரு மனிதனாலும் அடைய முடியும் என்று வேதாந்தம் வலியுறுத்துகிறது.

சுவாமி விவேகானந்தர்

# போருக்கான சூழ்நிலையை இராணுவம் ஏற்படுத்துகின்றது

## விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

(மன்னார்)

இராணுவத்தினர் போருக்கான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்தி வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மன்னார் வட்டக்கண்டல் பிரதேசத்தில்நேற்றுவிடுதலைப்புலிகளின் அரசியல் துறையினருக்கும் மன்னார் மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்இனியவன், மன்னார் மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை அண்மைக் காலமாக சீர்குலைந்துள்ளதாகத் தெரிவித்ததுடன் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் இராணுவம் போருக்கான சூழலை ஏற்படுத்தி வருவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மன்னார் மாவட்டத் தலைவர் யோகிம், குறித்த விடயங்கள் தொடர்பாக தாம் இராணுவத்தினருக்கு அறிவித்திருப்பதாக குறிப்பிட்டார்.

இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் இணக்கம் ஒன்றை ஏற்படுத்துகின்றபோதே வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

இந் நிலையில் மக்களைவிடுதலைப்புலிகள் அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்துமாறு யோகிம் கேட்டுக்கொண்டார். (ச-4)

## சிறப்புத...

நியமிக்கப்படுவார் என்பதை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் இலங்கையின் சமாதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வெளிப்படுத்தவில்லை.

எனினும் இனப்பிரச்சினை விடயத்தில் அனுபவத்தினைக் கொண்டுள்ள ஹெல்கீசன் இந்நியமன முறையில் முதலிடம் வகிக்கிறாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நியமனத்தை சொல்ஹெய்மே மேற்கொள்ளவுள்ளார். இந்நியமனத்திற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் ஆலோசனை மேற்கொள்ளப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 23 ஆம் திகதி சொல்ஹெய்ம் இலங்கைக்கு வரத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் அண்டிய பகுதிகளில் நேற்று இராணுவத்தினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கொட்டடி,முஸ்லிம் பள்ளி வாசல் வீதி, சீனிவாசகம் வீதி ஆகிய பகுதிகளை உள்ளிட்ட பகுதிகளே இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

காலை 6 மணிக்கு ஆரம்பமான சுற்றிவளைப்பு நண்பகல் 11 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. தேடுதலின் போது வீடுவீடாகச் சென்று சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. (ச-9)

# தீவுப் பகுதிக்குச் செல்வோர்மீது சோதனை நடவடிக்கை அதிகரிப்பு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் கடற்படையினரின் சோதனைக் கெடுபிடிகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவு பகுதிக்குச் செல்லும் மக்கள் பண்ணை, அல்லைப்பிட்டி, மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய இடங்களில் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதனால் யாழில் இருந்து செல்லும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் தாமதமாகவே கடமைக்குச் செல்லவேண்டியுள்ளதாகவும் இதனால் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒவ்வொருவரிடமும் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுவதுடன் அவர்கள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-126)

# சன்விஜ் தீவுக்குக் கிழக்கே நேற்றுப் பாரிய நிலநடுக்கம்

(அந்திலாந்திக்)

அந்திலாந்திக் கடற்பரப்பின் தென்பகுதியில் உள்ள சன்விஜ் தீவுக்கு கிழக்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் சுனாமித் தாக்கம் ஏற்படும் என கரையோரப் பகுதிகள் அச்ச நிலையில் காணப்பட்டன.

இப்பூமி அதிர்வு காரணமாக சுனாமி அலைகள் ஏற்பட்டு இலங்கையைத் தாக்கும் அபாயம் குறித்த தகவல் கிடைக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந் நடுக்கம் 7.3 றிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. சுனாமி அலை ஏற்படுவதற்கு தேவையான தாக்கத்தினை விட குறைந்த மட்டத்திலான தாக்கமே ஏற்பட்டுள்ளது.

இதன் பிரதிபலிப்புக்கள் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் சுனாமி வருவதற்கான எதுவித சாத்தியக்கூறும் இல்லையென புவியியல் மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகத்தின் சுனாமி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

12 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இந் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் இலங்கைக்கு பாதிப்பு எதுவும் இல்லையெனவும் அந் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சுனாமித் தாக்கம் ஏற்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக இலங்கையில் கரையோரப் பகுதி மக்கள் அச்சநிலையில் காணப்படுகின்றனர். (ச-4)

## இயல்பு நிலைக்குத்...

காணப்பட்டது. பெருமளவு பொலிஸாரினதும், இராணுவத்தினரதும் நடமாட்டம் நகரப் பகுதியில் காணப்படுவதால் மக்கள் பீதியுடனேயே நடமாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆட்டோக்கள், வாடகைக் கார்கள், தனியார் போக்குவரத்து பஸ்கள் என்பன வழமைபோல் தமது சேவையில் ஈடுபட்டன.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி கடந்த ஒருவார காலமாக அரச ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# இராணுவத்தினரால் நேற்று இளைஞர்கள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணத்தில் இருந்து திருநெல்வேலிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் பரமேஸ்வராச் சந்தியில் இராணுவத்தினரால் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. வேலை முடித்துவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே அவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை அலுவலகத்தில் கடமையாற்றும் இளைஞன் ஒருவரும் தனியார் காப்புறுதிக் கம்பனியின் முகவர் ஒருவருமே இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். (ச)

## காணாமல் போனோரை...

உயிரிழந்தவர்கள், அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையென தெரிவிக்கும் சான்றிதழ் பெற்று, அவர்களின் பிரதேச செயலகங்கள் ஊடாக உறவினர்கள் விண்ணப்பித்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமென அரச அதிபர் உறுதியளித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் விலக்கப்பட்டு பொலிஸார் பணியில் ஈடுபடுவர்.

தானும், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தரும் இணைந்து இராணுவத் தளபதியைச் சந்தித்தபோது, யாழ். பல்கலைக்கழகச் சூழலிலிருந்து இராணுவத்தை விலக்கி பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். ஒருசில நாட்களில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தான் நம்புவதாக அரச அதிபர் கூறினார்.

யாழ். குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அரச அதிபர் அனைத்து அரச அலுவலகங்களும் செயற்படத் தொடங்கியுள்ளதாகக் கூறினார்.

பாடசாலைகள் அனைத்தும் நேற்று ஆரம்பமாகியதாகவும், மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்தாக அதிபர்கள் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய முன்னைய நிலைப்பாடுகள் குறித்து தான் இராணுவ உயர் அதிகாரிகளுடனும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடனும் சந்தித்துப் பேசியதாகத் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கிராமசேவையாளருக் கான இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், யாழில் சுமுகநிலை ஏற்படும்போது அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-39,4)

# மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால், போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், நாவற்குழி தெற்கு ஸ்ரீமகா விஷ்ணு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினைச் சேர்ந்த 120 மீனவர்களுக்கு இறால் வலை வழங்கப்படவுள்ளது.

இறால் வலை வழங்கும் நிகழ்வு இன்று காலை 11 மணிக்கு ஸ்ரீமகா விஷ்ணு சனசமூகநிலையத்தில் நடைபெறவுள்ளது. ஸ்ரீமகா விஷ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.நாகராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.தருமலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (ச)

# யாழ்.இந்து அதிபரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

தரம்-5 புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைந்து யாழ்.இந்துக் கல்லூரியில்தரம்-6இற்கு அனுமதி பெறுவதற்காக கல்வியமைச்சுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு உரிய விண்ணப்பப்படிவத்தை இந்துக்கல்லூரியின் அதிபர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் வி.கணேசராசா அறிவித்துள்ளார். (ச)

## இலங்கைக்கு இராணுவ...

கொண்டு இந்திய அரசாங்கம் இலங்கைக்கு எவ்விதமான இராணுவ உதவியும் வழங்கக்கூடாது.

இது தமிழருக்கு எதிராக மேலும் மேலும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். அதற்கு இந்தியா அரசு பொறுப் பேற்கும் வகையில் இராணுவ உதவி வழங்கக் கூடாது என அவர் கேட்டுக்கொண்டார். (ச-4)

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் சதாசிவலிங்கம் (முத்துலிங்கம்)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.16 பொன்னப்பாலேன், வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சதாசிவலிங்கம் அவர்கள் 2006. 01.02 அன்று காலமாகிவிட்டார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் வள்ளிம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், அமரர் சண்முகலிங்கம் மற்றும் கனகலிங்கம் (கனடா)(லிங்கம் பிரதேஸ்) ,திரு. இராசலிங்கம், அமரர்களான நாகலட்சுமி சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான விசாலாட்சி , லட்சுமி, செல்லம்மா, விக்கினராஜா மற்றும் கனகம்மா ,சிவகங்கை, கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாகர்(கனடா), சுஜாதா (லண்டன்), கவிதா (பிரான்ஸ்), திவாகர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகி (லண்டன்), சண்முகதாஸ் (லண்டன்), குமரகுருபரன்(பிரான்ஸ்), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகா,சஜித்தியா,தனுசன், காருண்யா, அபிராம், பிரவின், வர்மிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 2006.01.05 காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று வண்ணார் பண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்,
மனைவி, மக்கள்.

(0125)















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.